முரசொலி

வார இதழ் — ஆசிரியர் மு. கருணாநிதி

முரசு 3 | 12—4—57 | வெள்ளி | ஒலி 51

இதுதான் காரணமோ!

இந்த ஆண்டும் ராமநவமி வந்து போயிற்று; ஆனால் திராவிடர் கழகம் ராமர் எரிப்பு; உடைப்பு நடத்தவில்லை.

சுற்றிலும் பகை சூழ்ந்துவர வெற்றி முரசு தட்டியிருக்கிறோம்!

[பொதுத் தேர்தல் முடிவு குறித்து நமது பொதுச் செயலாளர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்பட்டிருக்கின்றன.]

இன்றைய சூழ்நிலையில் திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையும் உறுதியும், அறிவும் ஆற்றலும், தகுதியும் திறமையும் பெற்ற எதிர்க் கட்சியாக இயங்கக்கூடியதாகும் என்பதை இந்தத் தேர்தல் நாடறியச் செய்துவிட்டது.

தமிழக சட்டசபையில் அமைந்துள்ள 205 இடங்களில் நாம், தேர்தல் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு எதிர்பார்த்தது ஏறத்தாழ 30 இடங்கள். ஆனால், நாம் 15 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நமக்கு ஓரளவுக்கு ஏமாற்றத்தை உண்டாக்கி இருப்பினும், வாக்காளர் பெருமக்கள் நமக்குத் தந்துள்ள ஆதரவை எண்ணிப் பார்க்கும்பொழுது நமக்கு ஏற்றமும் மகிழ்ச்சியும், பூரிப்பும் பெருமிதமுமே ஏற்படுகின்றன.

நாம் இந்தத் தேர்தலில் 16,28,598 வாக்குகளைப் பெற்றிருக்கிறோம் ஆதிக்க பலமும், அதிகார பலமும், பண பலமும், தீய படைபலமும் பெருவாரியாகக் கொண்ட காங்கிரஸ் 201 இடங்களில் போட்டியிட்டு 50,40,587 வாக்குகளைப் பெற்றிருக்கிறது. ஆனால் நாம் 15 இடங்களைப் பெற்றிருக்கிறோம்—காங்கிரஸ் 151 இடங்களைப் பெற்றிருக்கிறது. நம்மைவிட இரண்டு பங்கு மட்டுமே அதிக வாக்குகளைப் பெற்ற காங்கிரஸ், ஒன்பது பங்கு அதிகமான இடங்களைப் பெற்றிருக்கிறது. இதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் பல இடங்களில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தும், குறைந்த அளவு எண்ணிக்கை வித்தியாசத்தில் தோல்வியடையும் நிலை ஏற்பட்டதுதான். பெரும்பான்மையான திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களுக்குப் போதுமான இன்றியமையாத அடிப்படை வசதிகள் அறவே இல்லாமையே, இந்நெருக்கடியான நிலை ஏற்பட்டதென்பதை உண்மை நிலையை ஆராய்ந்து பார்ப்போர் எளிதில் உணரலாம்.

தாம் போட்டியிடும் எல்லா இடங்களிலுமே வெற்றி கிட்டிவிடும் என்கின்ற நம்பிக்கையில் தனது அபேட்சகர்களை திராவிட முன்னேற்றக் கழகம் நிறுத்தவில்லை. நாம் மேலே குறிப்பிட்டுள்ளபடி இன்றைய சூழ்நிலையில் குறைந்தது 30 இடங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு இருக்குமென திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்பார்த்தது.

காங்கிரஸ் ஆதிக்கமும் ஜனநாயகமற்ற போக்கும், நமக்குத் தொல்லை கொடுக்காமல் தடுத்து நிறுத்தவே சில தொகுதிகளில், கழகம் தனது அபேட்சகர்களை நிறுத்திற்று. வேறு சில இடங்களில் கழகத்தின் சக்தி சிதறாமல் காப்பாற்றப்படவும், கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருக்கவேண்டுமென்று கருதியும் கழக அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டார்கள். நாம் எதிர்பார்த்த இடங்கள் சிலவற்றில் வெற்றி கிட்டாமற் போனதற்கு நிதி வசதியின்மையே முக்கிய காரணமாகும்.

தேர்தலுக்கு முன்னால் நாம் முடிவு செய்தபடி ஐந்து இலட்சம ரூபாய் திரட்டுவதற்கான வழிவகைகள் நிறைவேறியிருக்குமானால், மேற்கண்ட குறைபாடுகளை எளிதில் தவிர்த்திருக்க முடியும். தேர்தல் பணிகளில் இப்போதுதான் நாம் முதன்முதலாக இறங்க வேண்டியவர்களாக இருந்தபடியாலும், தேர்தல் பணியில் போதுமான பயிற்சியும் பழக்கமும், அதே சமயத்தில் போதுமான நேரமும் இல்லாதபடியாலும் தொகுதிகளை ஆராய்தல், அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்தல், பிரச்சார வசதிகள் காணுதல் ஆகியவற்றிலே தேர்தல் நாள்வரையில் முழுகவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டபடியாலும், நிதி திரட்டும் திட்டம் நிறைவுபெற இயலாமற் போய்விட்டது.

நமது கழகத்திற்கென தனிச் சின்னம் கிடைக்கப் பெறாததும் சில தொகுதிகளில் தொல்லைகளுக்குக் காரணமாயிருந்திருக்கிறது.

நமது நாட்டில் தேர்தல் என்பது மிக செலவினம் பயக்கக் கூடிய ஒன்றாகவும், நாணயமானவர்கள் — நேர்மையானவர்கள்—ஏழைகள் துணிந்து அணுக முடியாத ஒன்றாகவும் அமைந்திருப்பதும் வருந்தத் தக்கதாகும்.

இரட்டை உறுப்பினர் தொகுதிகளில் பெரும்பான்மையான வாக்குகள் செல்லுபடியாகாமற் போகுந் தன்மையிலும் தேர்தல் முறை அமைந்திருக்கிறது. இந்தக் குறைபாடுகளை நீக்காமற் போனது மிக வருந்தத் தக்கதாகும். இத்தகைய குறைபாடுகளெல்லாம் சேர்ந்து, சில தொகுதிகளில் தி. மு. கழகம் வெற்றி பெறாமற் போனதற்குக் காரணங்களாயிருந்தன.

இவை மட்டுமல்லாமல், மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் தனித் தனியாகவும், கூட்டாகச் சேர்ந்து கொண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை முழுமூச்சுடன் எதிர்த்திருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள தொல்லைகள், போட்டிகள், குறைபாடுகளுக்கிடையே திராவிட முன்னேற்றக் கழகம் தன்னந் தனியாக நின்று சட்டசபையில் 15 இடங்களையும், 16,28,598 வாக்குகளையும், பாராளுமன்றத்தில் நேரிடையாக இரண்டு இடங்களையும், ஆதரவு தந்த முறையில் மேலும் இரண்டு இடங்களையும் பெற்றிருப்பதானது, உண்மையிலேயே கழகத்தின் ஏற்றத்தையும், ஆக்கத்தையும், வளர்ச்சியையும் காட்டுவதாகும்.

கழகத்திற்கு இத்தகைய புகழையும் பெருமையையும், பொலிவையும் வலிவையும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும், மதிப்பையும் மகிழ்ச்சியையும் நாடெங்கிலும் தேடித் தந்த வாக்காளர் பெருமக்கள் அத்தனை பேருக்கும் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்தப் பொதுத் தேர்தலில், அரசியல் கண்ணியத்தையும், நாகரீகத்தையும் எடுத்துக் காட்டியதோடு, தேர்தல் காலத்தில் அமைதியை நிலை நாட்ட திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பாடுபட்டு வந்திருக்கிறது. கழகத்தின் இப்பண்பு மாற்றுக் கட்சியினராலும் பத்திரிக்கையாளர்களாலும் அரசாங்க அதிகாரிகளாலும் போற்றப்படுவது நமக்கெல்லாம் பூரிப்பை அளிக்கிறது.

இத்தேர்தலில் வெற்றி பெற்று கழகத்தின் புகழையும், பெருமையையும், செல்வாக்கையும் உயர்த்தித் தந்துள்ள கழக எம். எல். ஏ.-க்களையும், கழக எம். பி.-க்களையும் நாம் மனதாரப் போற்றிப் பாராட்டி வரவேற்பதுடன், அவர்களது உள்ளமெல்லாம் வாழ்க! அவர்களது முயற்சி வளர்க! அவர்களது தொண்டு வெல்க!—என்று வாழ்த்துவோமாக!

நாடெங்கிலுமுள்ள கழகக் கிளைகளும், கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் மேலும் உற்சாகமுடன் உறுதி கொண்டவர்களாகக் கழகப் பணியாற்றி, எதிர்கால வெற்றிக்கான சூழ்நிலையை ஆங்காங்கு உருவாக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★★★

"அக்கிரகார எதிர்ப்புச் சூறாவளி"- "கேடு"

தலைவர் பெரியார் அவர்கள் "கோர்ட்டு அவமதிப்பு வழக்கில்" தண்டிக்கப்பட நேர்ந்ததால் அப்போது தமிழ் நாட்டில் மாபெரும் கொந்தளிப்பு ஏற்படப் போவது உறுதி. அக்கிரகாரம் இதை எப்படிச் சமாளிக்கப் போகிறதோ நமக்குத் தெரியாது. உயர் நீதி மன்றத்தார் வழக்கை "வாபஸ்" பெறவிட்டால், அக்கிரகார எதிர்ப்புச் சூறாவளியைக் கிளப்பிவிட்ட பொறுப்பு முழுவதையும் ஏற்கவேண்டியவர்களாவார்கள்......ஆகவே அக்கிரகாரத்திற்கு ஏதோ ஒரு கேடு ஏற்படத்தான் உயர் நீதி மன்றத்தார் பெரியார் அவர்கள் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள் என்று கருதுகிறோம்.

—"விடுதலை" (3—4—57)

"அமைதி....அமைதி.... அமைதி!"

தலைவர் பெரியார் அவர்கள் சிறையிலிருக்கும்போதுதான் வெளியிலிருப்பவர்களின் பொறுப்பு பல மடங்கு அதிகம். ஒரு சிறு கலவரங்கூட நடைபெறாதபடி அமைதியான முறையில் கிளர்ச்சி நடைபெற வேண்டும்; எதிரிகளும் துரோகிகளும் கிளர்ச்சியில் மறைமுகமாக ஈடுபட்டுக் கலவரத்தையும், குழப்பத்தையும், பலாத்காரத்தையும் தூண்டுவார்களானால் அவர்களை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

—"விடுதலை" (8—4—57)

வெள்ளி *12—4—57* *சென்னை*

இலங்கையில் இழி நிலை!

தென்னிலங்கைத் தீவின் தேயிலைத் தோட்டங்களிலே; தொழிற்சாலைகளிலே தொல்லைகள் ஆயிரம் அனுபவிக்கும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தலையிலே மீண்டுமோரு இடிவிழுந்திருக்கிறது பண்டார நாயகாவின் துரைத்தனத்திலே!

அவதிப்படுவதற்கென்றே பிறந்தவன் தமிழன்! குட்டக் குட்டக் குனிந்துகொடுக்கவே பழக்கப்பட்டது அவன் பண்பு!—என்று நிரூபிக்கத்தக்க வகையிலே நெருப்பை அள்ளிக் கொடுக்கிறார்கள், நெருப்பினும் கொடிய மொழி வெறியர்கள்!

நாடற்றவராம்—அங்கு வாழ்ந்து உடல் பொருள் ஆவி தந்தவர்களுக்குப் பெயரளித்திருக்கிறார்கள்!

தோல் புகழ்கொண்ட கன்னித் தமிழ் நாட்டின் உரிமையாளன்! அவன்தான் நாடற்றவர் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறான்!

நாடு என்னும் தத்துவத்தின் உட்பொருள் அறியாது, உலகம் காட்டு வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தகாலை அரசியல் இயற்றி போதிகைடன்ன புகழ்பெற்றிருந்தோர் வழி வந்தவன்தான் இப்போது நாடோடியாக்கப்பட்டு உதைத்துத் தள்ளப்படும் இழிதகை நிலையிலேயிருக்கிறான்!

பண்டார நாயகா பட்டத்துக்கு வந்திருக்கிறார்; விரிந்த எண்ணமும், விசால நோக்கமும் கொண்டவர்; ஈழத்திலே நீதியை நிலைநாட்டித் தமிழ்ப் பெருங்குடிக்கு நல்லது செய்வார்—என்றுதான் எதிர்பார்த்திருந்தோம், இதுநாள் வரை! ஆனால் இன்றோ இதுவரைவிடக் கொடுமை பல புரிந்த கோத்தலவாலை எவ்வளவோ மேல் என்பதை நிலைநாட்டுதற்குத்தான் அவர் பாடுபடுவதாக நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது!

இன்னலுக்குமேல் இன்னல்! தொல்லைக்குமேல் தொல்லை!—இதுதான் இலங்கைத் தமிழன் நிலை!

—பண்டார நாயகா வந்ததும் அவனது இழிதகை நிலையிலே அணுவளவும் குறைக்கப்பட்டதாகத் தெரியவில்லை! இந்தியர் என்ற போர்வையிலே இலங்கையிலே குடியுரிமை பெறுவதற்காக அவதிப்படுவோர் பத்து லட்சம் பேர்!

இவர்களில் குடியுரிமை கோரும் மனுவினைத் தாக்கல் செய்திருப்பவர்கள் எட்டு லட்சம் பேர்!

ஆனால் இதுநாள்வரை மனித உரிமைக்கு அடுத்த முதல் உரிமையான அந்தக் குடியுரிமையினைப் பெற்றிருப்பவர்களோ ஒரு லட்சத்திற்கும் குறைவுதான்!

—மீதமுள்ளோர் அத்தனைபேரும் தாங்கள் இலங்கைத் தீவினை வளமுறச் செய்வதற்காகச் சொட்டிய குருதி வெள்ளம் அத்தனையும் வீண்! வீண்!!—என்று கண்ணீர் வெள்ளம் சிந்தி பரிதாபத்திற்குரிய நிலையிலே; இந்திய அரசினராலும், இலங்கை அரசினராலும் புறக்கணிக்கப்பட்ட சூழ்நிலையிலே புண்பட்ட நெஞ்சினராய்ப் போராடிக்கொண்டிருக்கிறார்கள்!

பண்டார நாயகா பதவி ஏற்பதற்கு முன்பாவது 10,500 பேர் இலங்கைக் குடிகளாகப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்! ஆனால் இவர் பதவி ஏற்ற பிறகு குடியுரிமை பெற்றிருப்பவர்கள் 4,500 பேர்தான்!

—இதிலிருந்தே பண்டார நாயகாவின் துரைத்தனம் ஈழம் வாழ் தமிழினத்தை எவ்வளவு தூரம் புறக்கணித்து வைத்திருக்கிறது என்பது புலப்படும்!

—இந்த நிலையிலே புதுப்புதுக் குழப்பங்களும், பிரச்சினைகளும் அலைமோதி இலங்கைத் தமிழினத்தை ஆட்கொள்ள வருகிறது!

இலங்கையின் நல்வாழ்விற்காக உழைத்து உழைத்து உருக்குலைந்தவர்களை எப்பாடுபட்டாவது எந்தவித ஆசைகளைக் காட்டியாவது பாடுபட்ட பூமியிலிருந்து விரட்டிவிட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன!

இலங்கைத் தோட்டங்களிலே பணிபுரியும் தொழிலாளர்க்குரிய 'பிராவிடண்ட் பண்டு' என்கிற நல நிதியில், தமிழினத்தைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கு, மற்றைய தொழிலாளிகளைப்போல் அந்த நல நிதியிலிருந்து வட்டித் தொகை கிடைக்காதாம்!

அவர்கள்—நாடற்ற இந்தியர் என்கிற பட்டப் பெயருக்கு இரையாகியிருக்கும் அவர்கள்—இலங்கையை விட்டு வெளியேறப்போவது உண்மைதான்—என்று நிரூபணம் செய்தால்தான் அவர்கள் ஏனைய இலங்கைத் தொழிலாளிகளைப்போல நல நிதியிலிருந்து வட்டித் தொகையைப் பெற முடியுமாம்!

—இது மட்டுமல்ல; பண்டார நாயகாவின் அநீதியின் வரம்புக் கோட்டையை தாண்டுகிற அளவுக்குத் தகாச் செயல்கள் புரிந்து வருகிறார் என்பதும் அவரது வருங்காலத் திட்டங்கள் மூலம் உண்மையாகின்றன:

குடியுரிமை பெறாத தமிழினத்தவர்களை—அதாவது இந்தியர்களை இனிமேல் விரட்டப்போவதில்லையாம்! அவர்களை ஓட்டுரிமையற்ற ஊமைகளாக அங்கேயே வைத்திருக்கவும் யோசனையொன்று உருவாகி வருகிறதாம்!

கண்ணிரண்டை மூடிவிட்டு கலாப மயிலைப் பார்க்கச் சொல்வதைப்போல்—

வாயை மூடிவிட்டு குன்றுபோல் அன்னத்தைக் கொண்டுவந்து எதிரே குவிப்பதைப்போல்—

ஓட்டுரிமையைப் பிடுங்கிக்கொண்டு—ஊமைகளாய்—சாரற்ற சக்கைகளாய்—உயிரற்ற நடைப் பிணங்களாய் உலவவிட முயற்சி செய்கிறார்கள்!

ஓட்டுரிமை கிடையாதாம்! அந்தோ; பரிதாபம்! பெறற்கரிய ஓட்டுரிமையைப்பெற்றிருப்பவர்களது நலன்களுக்கே வேட்டுவைக்கும் சர்வாதிகாரச் சண்டாளர்கள் உலவுகின்ற நேரத்திலேதான் அந்த உரிமையையும் பறித்துவிடப் பிரயத்தனம் செய்கிறார்கள்!

—நிலைமை இவ்விதம் நெருக்கடியான கட்டத்தை அடைந்து வரும் இந்த நேரத்திலேதான் அவதிப்படுவதில் பெரும்பான்மையோர் தமிழர்—தென்னாட்டவர் என்கிற ஒரே காரணத்தால் தன்னை மறந்து சாம்ராஜ்ய விவகாரங்களிலே ஈடுபட்டிருக்கும் இந்திய அரசாங்கத்தின் சார்பாக கிருஷ்ண மேனன் பேசியிருக்கிறார், அண்டை நாடான இலங்கையுடன் நட்பு முக்கியமென்று!

அதற்காகத்தான் போலும் லட்சோப லட்சம் தமிழர்களின் தலை கிள்ளியெறியப்படுவது பற்றி கவலைப்படாமலிருக்கிறார்கள்!

கண்கள் போனால் என்ன; சித்திரம்தான் முக்கியம்; எனவேஅதை விற்றுச் சித்திரம் வாங்குவோம்-என்னும் பான்மையிலே இலங்கையின் நட்பு வேண்டுமே என்பதற்காக அதட்டிக் கேட்கும் தைரியத்தை இழந்துவிட்டது வடநாட்டுப் பேரரசு!

ஏனிந்த நிலைமை? தென்னாட்டவர்களுக்கு ஓட்டுரிமை இருந்தும் அவர்களது உடன் பிறந்தவர்கள் அன்னியத் தீவிலே அவதிக்குள்ளாவதைத் தடுத்து நிறுத்த முடியாதது ஏன்?

—வடநாட்டவர்களின் ஓரவஞ்சகப் போக்கு-சர்வாதிகார மனப்பான்மை—இவைதான் காரணம்!

ஓட்டுரிமை இருந்தும் தென்னாட்டவர் தங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்யும்படி வடநாட்டு அரசைத் தட்டிக் கேட்க முடியவில்லை!

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஓட்டுரிமையே இல்லாவிட்டால்?

—நினைத்துப் பார்த்தாலே நெஞ்சம் வெடித்துவிடும்போலிருக்கிறது; சிங்கள வெறி நிச்சயம் சீரழிந்த தமிழினத்தை மேலும் சீரழித்துவிடும்!

—இந்த இழிதகை நிலைமை ஏற்படாமலிருக்க இலங்கை வாழும் தமிழர்களனைவரும் ஒன்றுபட்டுப் போரிடுவார்கள் என்றே எதிர்பார்க்கிறோம்!



அன்புள்ள பொன்முடி,

புவியிலே ஒரு புதுமையாய் கேரளத்திலே கம்யூனிஸ்ட்டுகள் தங்களது பலாத்கார நோக்கத்தினைக் கைகழுவி விட்டுப் பதவியேற்றிருக்கின்றனர்.

ஒன்று காங்கிரஸ் அரசு கட்டில் ஏற முடியும்; அல்லது அவர்களது அடிவருடிகளாகவும்; அடியார்க்கு அடியார்களாகவும்; கொள்கை யளவில் கொஞ்சமும் பேதம் இல்லாதவர்களுமான பிரஜா சோஷலிஸ்ட்டுகள்தான் வர முடியும் என்று இருந்த எண்ணம் இப்போது இந்த உபகண்ட முழுமைக்கும் ஒரு பாடமாக இருக்கும் விதத்திலே உடைத்து நொறுக்கப்பட்டிருக்கிறது!

ஆனால் நண்பா! கேரளத்தில் தான் அவர்களுக்கு எவ்வளவு எதிர்ப்பு!—என்பதைப் பார்க்கும்போது நமக்கும் அவர்கள் மீது பரிதாபம் ஏற்படத்தான் செய்கிறது!

நம்பூதிரியார் முதன் மந்திரியாக வந்துவிட்ட போதிலும்; அவர் நினைத்தவாறு கேரளத்தை உரிமைகள் உடைப்பெடுத்தோடும் சுதந்தரச் சீமையாகவும்; சமத்துவம் கொழிக்கும் பூமியாகவும் மாற்றி அமைத்திட முடியவில்லை.

ஏன்? அங்குள்ள கம்யூனிஸ்ட்டுகளிடம் திட்டமில்லையா?

இருக்கலாம், நிறைய!

நவகேரளத்தை நானிலம் புகழும் பிரதேசமாக மாற்றுவதற்கு அவர்களிடம் திட்டங்கள் கோடியிருக்கலாம்!

ஆனால் நண்பா! நம்பூதிரியாரின் கைகளிலே பலமான இரும்பு விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன!

மேய்ச்சலுக்குக் கொண்டு செல்லும் மாட்டினைக் குறிப்பிட்ட இடத்திலே முளையடித்துக் கட்டிவிடுவார்கள் அந்த மாடு பத்தடிக்கு அப்பால் பசும்புல் வெளியொன்று இருந்தும் அங்கு செல்ல முடியாமல், இருந்த இடத்திலிருந்து கொண்டே சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கும்!

அன்புள்ள பொன்முடி! கேரளத்தின் நிலைமையும் அப்படித்தான்!

நம்பூதிரியாரும் அவரது துணைவர்களும் இன்னின்னவை கேரளத்து மாந்தருக்குப் புது வாழ்வு அளிப்பதற்குப் பயன்படும்; இவையிவை இந்த நாட்டிலே ஜனநாயகம் மலர்ச்சியடைய பலன்தரும்—என்று கருதுகிறவைகளைக் கொண்டு காரியமாற்ற முடியாதபடி அவரது தலைக்கு நேராக பளபளக்கும் பட்டாக்கத்தியொன்று தொங்கிக் கொண்டிருக்கிறது!

"என்ன நண்பனே! நம்பூதிரியாரின் கைகளிலே இரும்பு விலங்கு என்கிறாய்! அவரது தலைக்கு நேராகப்பட்டாக்கத்தி தொங்குகிறது என்கிறாய்! விவரம்கூறு என்று வினவுகிறாயா?

தோழனே கேள்! நான் கூறுகிற விலங்கு வேறு ஒன்றுமல்ல; டெல்லியிலிருக்கும் மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடு என்னும் துருப்பிடித்த சங்கிலி தான் அது!

நான் சொன்னேனே பட்டாக் கத்தியொன்று நம்பூதிரியாரின் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்கிறது என்று. அதை என்னவென்று நினைக்கிறாய்? எந்த நேரத்தில் அறுந்து விழுமோ; எந்தச் சமயத்தில் தொந்தரவு கொடுக்குமோ என்று பார்ப்பவர் ஐயுறும் விதத்திலே இருக்கும், கவர்னர் ஆட்சிப் பிரகடனம் என்னும் காங்கிரஸ் ஆட்சியின் சர்வாதிகாரப் போக்கின் சாயலன்றி வேறொன்றுமில்லை, அது!

ஆமாம்; இன்றைய அரசியல் சட்டப்படி மாநிலங்களின் ஆட்சித் தலைவர்கள் மண்பொம்மைகளாய்த்தான் வீற்றிருக்கிறார்கள்! அவர்களுக்குப் பூரண உரிமையில்லை; சுதந்தரம் இல்லை! காமராசர் போன்ற தலையாட்டி பொம்மைகளுக்கே ஏற்ற உத்தியோகமாகத்தான் அது இருந்துவருகிறது, இதுநாள்வரை!

நம்பூதிரியார் உண்மையில் ஏதாவது நல்லது செய்ய விரும்பினால்கூட அரசியல் சட்டம் அவரைப் பின்னுக்குப் பிடித்து இழுக்கிறது!

கேரளத்துக் கம்யூனிஸ்ட்டுகள் சமதர்மப் பூங்காவை நோக்கிப் பீடு நடை போட்டுச் சென்றால் மத்திய அரசாங்கத்திலே குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம்—என்னும் ஓநாய்கள் அவர்கள்மீது விழுந்து பிராண்டுவதற்குத் தயாராகி வருகின்றன!

"கேரளத்துத் தோட்டங்களைத் தேசியமாக்கும் திட்டம் வைத்திருந்தீர்களே; அதை மத்திய அரசாங்கம் ஒத்துக்கொள்ளாமல் போனால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டால் அதற்கு நம்பூதிரியார் பதில் சொல்கிறார்; "என்ன செய்வது? எங்களது பலமான ஆட்சேபணையைத் தெரிவித்துவிட்டு சும்மாயிருக்க வேண்டியதுதான்!"

— உண்மையிலேயே இன்றைய அரசியல் சட்டப்படி நம்பூதிரியாரின் நிலைமை இதுதான!

எதிர்க்க முடியாத கோழைகள் நிலைமையிலேதான் இன்று மாநிலங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன!

மத்திய அரசாங்கத்திற்கு எடுபிடிகள்; ஏவலாளிகள்; அடிமைகள் — இவர்கள்தான் மாநிலங்கள்!

இந்த இழிதகை நிலைமையிலே ஒரு தலைகீழ் மாற்றம் ஏற்பட வேண்டுமானால்; இன்று நம்பூதிரியாரின் கைகளிலே அரசியல் சட்டம் மாட்டியிருக்கும் இரும்பு விலங்கு சுக்கல் சுக்கலாக உடைத்தெறியப்பட வேண்டுமானால், அவரது தலைக்கு மேலே மத்திய அரசாங்கம் தொங்கவிட்டிருக்கும் உருவிய பட்டாக்கத்தி உள்ளங் கவரும் மாலையாக மாற வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

—டெல்லி மத்ய அரசாங்கத்திலே குவிந்திருக்கும் அதிகாரங்கள் பிடுங்கப்பட வேண்டும்!

அதனிலும் முக்கியமாக மாநிலங்களுக்குச் சுயநிர்ணய உரிமை தரப்பட வேண்டும்!

இதற்குத்தான் தலையாய இடம் கொடுத்திருக்கிறது தி. மு. க. வின் தேர்தல் பிரகடனம்:—

"இந்திய அரசியல் சட்டம் உரிமை வழங்கும் சாசனமாக அமையாமல் பெரிதும் உரிமையை மறுத்து, வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கு அரண் செய்யும் சட்டத் தொகுப்பாக உள்ளது அடுத்து யூனியன் அமைப்பிலிருந்து ஏதாவதொரு மாநிலம் பிரிந்து செல்ல விரும்பினால். பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் சம்மதித்தால்தான் பிரிந்து செல்ல முடியும் என்ற விதியினை அரசியல் அமைப்பு ஏற்படுத்திக் கொண்டுள்ளது. எனவே அரசியல் அமைப்பில் செய்யப்பட வேண்டிய முதல் மாற்றம், எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் உரிமையை தானே பெற்றிருக்க வழி செய்வதுதான்."

அன்புள்ள பொன்முடி! இந்த வாசகத்தைக் கண்டு நாம் திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டோம் என்று கேலியும் கெக்கலியும் செய்தவர்கள் இன்று கேரளத்திலே அதன் தன்மையை உணரும் நிலைக்கு வந்திருக்கிறார்கள்!

சோவியத் யூனியனிலே கொடுக்கப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமை இங்கு மறுக்கப்படுகிறதே—என்று கேரள சட்டசபையில் பேசுகிற அளவுக்கு வந்திருக்கிறார்கள்!

அருமை நண்பா!

நீ மறக்காமல் குறித்து வைத்துக்கொள்; கேரளத்துக் கம்யூனிஸ்ட் கட்சி இன்றில்லாவிட்டால் நாளை; நாளையில்லையேல் நாளை மறுநாள் வடநாட்டு மத்திய அரசினை எதிர்த்து எந்த விதத்திலாவது போர்க்கொடி உயர்த்தத்தான் போகிறது! நாம் பார்க்கத்தான் போகிறோம்! இது நிச்சயம்! நிச்சயம்!

இங்ஙனம்,
உன் அன்புத் தோழன்

அழகப்பர் மறைந்தார்!

ஈந்து ஈந்து கை சிவந்த பெருந்தகை; கல்விக்காகக் காலமெல்லாம் பாடுபட்ட செல்வக் கோமான் டாக்டர் அழகப்பர் அவர்கள் இம்மாதம் 5-ந் தேதி யன்று மறைந்தமை குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்.

அவரது பிரிவால் தமிழகம் ஒரு கொடைவள்ளலை இழந்திருக்கிறது; கல்விச் சாலைகள் தங்கள் காவலனை இழந்திருக்கின்றன!

கோடியில் ஒருவர் கொடுத்துச் சிறந்த அழகப்பர். அவரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை உரித்தாக்குகிறோம்.

10

வீரர்கள் புடைசூழ பல்லக்கு சென்றுகொண்டிருந்தது. பல்லக்கில் வீற்றிருந்த ருசியாவின் உள்ளத்தில் பயங்கரமான எண்ணங்கள் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தன. அல்தூனியாவின் கட்டுப்பாட்டின் கீழ் அவளுடைய வாழ்க்கை எப்படியிருக்கும் என்று எண்ணியவுடனேயே அவள் உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. சுதந்திரப் பறவையாக அதிகார வானில் வட்டமிட்டுத் திரிந்த அவள் இனி கூண்டுக் கிளியாக அடங்கி ஒடுங்கி வாழவேண்டும். இச்சைப்படியெல்லாம் இன்ப வாழ்வு வாழ்ந்த ருசியா, இனி யாருடைய கட்டளையையோ எதிர்பார்த்து வாழ வேண்டும்... ஆனால் அவளுடைய திட்டம் நிறைவேறி விட்டால்...? ஒருவாறு தப்பிக்க வழியேற்படலாம்......

கையிலிருந்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்தாள். தங்க மேனி முத்துச்சரப் பல்வரிசை, ஆசைக் கணை தொடுக்கும் அழகிய கண்கள், பெண்மையின் பேரெழில் பொங்கி வழியும் அங்கங்கள்—இயற்கை யளித்திருக்கும் இத்தனை படைக்கலன்களையும் வைத்துக்கொண்டு அவள் எதற்காகப் பயப்படவேண்டும்? யாருக்காகப் பயப்படவேண்டும்? கண்ணாடியில் தெரிந்த அவள் நிழல் அவளைப் பார்த்து இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்காமல் கேட்டது. சரசிகளின் சல்லாபத்தால் சாம்ராஜ்யங்கள் சரியவில்லையா? கடைவிழி நோக்கிலேயே எத்தனை பெண்கள் கலங்கிவிடாமல் ஆட்சியைக் கட்டிக் காத்திருக்கிறார்கள்? அழகினால் ஒரு பெண் ஆடவனை அடிமைப்படுத்திவிட்ட பிறகு அவள் ஆசையெல்லாம் கட்டளை தானே? இட்டதெல்லாம் சட்டம்தானே? அல்தூனியாவிற்கு அவளிடம் அளவு கடந்த ஆசையென்று சயத்கான் கூறினானே...ஆமாம், அந்த அலாவுதீனும் அப்படித்தான் கூறினான்...இதைப்பற்றி எண்ணியவுடனேயே, ருசியாவின் இருதயத்தில் அன்றிரவு சந்தித்த அலாவுதீனைப் பற்றிய நினைவு மேலோங்கியது. கண்டவுடனேயே உள்ளத்தைக் களவாடிவிட்ட அந்தக் கட்டழகன் எங்கே? சயத்கானைக் கேட்டிருந்தால்கூட அவரைப் பற்றிய விபரம் கூறியிருப்பானே! என்ன முட்டாள்தனம்செய்துவிட்டோம் - என பீகம் வருந்தினாள். அல்தூனியாவின் தளபதி என்று அலாவுதீன் கூறினாரே; அவரும் அல்தூனியாவின் பக்கத்தில் இருப்பாரே; சலீமா என்ற பெயரில் அவரை ஏமாற்றிய நான்தான் அரசி ருசியா என்று அறிந்தால் அவருக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றமும் நெருக்கடியும் ஏற்படும்! அவருடைய காதலி என்று அவர் நம்பிய சலீமா, ருசியா பீகமாக மாறியதோடு மட்டுமல்லாமல், அல்தூனியாவின் இச்சைக்கு உகந்தவளாகவும் ஆகின்ற நிலைமையை அவருடைய தூய அன்புள்ளம் எப்படித்தான் சகித்துக் கொள்ளும்...? என் வாழ்க்கையில் குறுக்கிடும் எவருக்குமே இன்பம் கிடையாதா?

பீகம் சிந்தனை நீண்டது போலவே பிரயாணமும் நீண்டு கொண்டேயிருந்தது! களைப்பு மேலிட பீகம் பல்லக்கிலேயே கண்ணயர்ந்தாள்.

11

போர்க்களத்தைவிட்டு காதலியின் சிறைச்சாலைச் சாவியோடு, காற்றினும் கடிய வேகத்தோடு யாகூத் சென்றுகொண்டிருந்தான். பமீயாவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் அவன் உள்ளத்தோடு அவனுடைய குதிரை போட்டி போட முயன்றுகொண்டிருந்தது. காதலியைக் காண வேண்டுமென்ற கரைகாணாத ஆசை அவனுடைய உள்ளத்தில் எத்தனையோ கனவு மாளிகைகளை எழுப்பிக் கொண்டிருந்தது.

அவன் கதவைத் திறந்துவிடுவான்; அவள் என்னவோ ஏதோ என்று நினைத்துக்கொண்டு, கிலியோடு திரும்பிப் பார்ப்பாள்; அவன் நிற்பதைப் பார்த்ததும் திக்பிரமை பிடித்துப்போய் கனவோ நினைவோ என்ற ஐயத்தில் கண்களைக் கசக்கிவிட்டுக் கொள்ளுவாள். "பமீ" என்பான் அவன். சிட்டெனப் பறந்துவந்து அவனது மார்பில் சாய்வாள்; அவளை அப்படியே வாரி எடுத்து அணைத்துக் கொள்வான்! அப்பப்பா! அந்த அணைப்பின் சுகம்—யாகூத் இன்ப அலைகளில் மிதந்து சென்றுகொண்டிருந்தான். டெல்லியின் கோட்டைக் கொத்தளங்கள் கண்ணுக்குத் தெரிந்தன. லட்சிய பூமியை அடையப்போகிறோம் என்ற பெருமிதத்தோடு யாகூத் சென்றுகொண்டிருந்தான் வேக வேகமாக.

டெல்லியின் நுழை வாயிலைக் குதிரை தாண்டியது. பெய்ராமின் முடிசூட்டு விழாவைக் கொண்டாட டெல்லி நகரம் தயாராகிக் கொண்டிருந்தது. நேற்று வரையில் ருசியாவின் ஆட்சிக்குப் பக்கமேளம் வாசித்த ஓம்ராக்கள்கூட இன்று புது மன்னன் பொறுப்பேற்கும் விழாவிலே பூரிப்போடும், புன்னகையோடும், தோற்றுப்போன அரசிபற்றி துயரம் எள்ளளவும்கூட இல்லாமல் நடமாடிக் கொண்டிருந்தனர். தங்கள் அட்டூழியங்களுக்குச் சலுகையளிக்கும் வரையில், தங்களுடைய சுக போக சுரண்டல் வாழ்க்கைக்குப் பங்கம் ஏற்படாமல் அரண் கோலப்படும் வரையில், யார் ஆண்டால் எமக்கென்ன என்கின்ற மனப்பான்மையும் போக்கும் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் யாகூத் இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. வழியில் பார்த்து வணக்கம் செலுத்துவோரைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. என்னுடைய வாழ்க்கையின் ஜோதியை அந்த இருண்ட பாதாளச் சிறையிலிருந்து மீட்கும்வரை, உலகத்தில் எதைப்பற்றி எனக்கென்ன கவலை? — என்ற உணர்ச்சியோடு யாகூத் சென்றுகொண்டேயிருந்தான்.

பாதாளச் சிறையின் வாயிலை அவன் அடைந்தவுடனேயே காவலாளிகள் வழி விட்டு விலகினர். ஆனால் யாகூத்தோ அவர்களிடம்கூட எதுவும் பேசாமல் படிகளில் 'திடுதிடு' வென்று இறங்கி ஓடினான். பின்னாலேயே பயத்தை ஏந்திக்கொண்டு காவலாளிகள் ஓடி வந்தனர். நேரே, அரசி சொன்ன அறைக்குச் சென்றான்; பூட்டைத் திறந்தான்; ஆவலோடு 'பமீ!' என்றான். பமீ பேசவில்லை. 'பமீ" என்ற அவனுடைய குரல் மட்டும் எதிரொலித்தது. மீண்டும் மீண்டும் "பமீயா, பமீ" என்று கூச்சலிட்டான். ஆயிரம் குரல்கள் 'பமீயா, பமீ!"என்று எதிரொலித்து அவனையே கேலி செய்தது.

எந்தப் பெண்ணின் எழிலுருவை நெஞ்சிலே நிறுத்தி, உயிரைப் பணயமாக வைத்துப் போராடி, வெற்றியும் பெற்று, அவளைக் காண ஓடோடி வந்தானோ, அந்தப் பெண்—அந்த

✽ தொடர்ச்சி 8-ம் பக்கம்

6-4-57 அன்று, சென்னை, நுங்கம்பாக்கத்தில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், ஆசிரியர் மு. க. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.

புரவி ஆட்டக்காரர்தான் அவர் காலில் அணிந்த

அன்புள்ள தலைவரவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே! இன்றைய தினம், நம்முடைய தொகுதியின் சட்டசபை உறுப்பினரான தோழர் ஆசைத்தம்பி அவர்களையும், என்னுடைய குளித்தலைத் தொகுதியிலிருந்து வெற்றி பெற்ற என்னையும் பாராட்டுவதற்காக நடைபெறும் இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள எனக்கும் வாய்ப்பளிக்கமைக்கு நான் மிகமிக மகிழ்ச்சி அடைகிறேன். நான் ஏன் இத்தொகுதியை 'நம்முடைய' தொகுதி என்று குறிப்பிடுகிறேன் என்றால், இந்த ஆயிரம் விளக்குத் தொகுதியில் வெற்றி பெற்ற தோழர் ஆசைத்தம்பி அவர்களுக்கு விழுந்த ஓட்டுகளில் என்னுடைய வீட்டு ஓட்டுகளும் நான்கைந்து இருந்திருக்கின்றன என்பதால்தான். ஆயிரம் விளக்குத் தொகுதி வாக்காளர் பட்டியலில் என்னுடைய பெயரும் பதிவாகி இருக்கின்ற காரணத்தால், அவர் எனக்கும் எம். எல். ஏ. ஆனபடியால், வாக்காளர் என்ற நிலையில் நின்று நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தோழர் ஆசைத்தம்பி அவர்கள் இந்தத் தொகுதி மக்களுக்கு ஆற்ற இருக்கும் தொண்டுகள் பெருகி, அவர் என்றென்றும் இந்தத் தொகுதியின் எம். எல். ஏ. வாகவே இருக்க வேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் பல இடங்களில் போட்டியிட்டு, பதினைந்து இடங்களை மட்டுமே கைப்பற்றி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் நல்ல பெரும்முன்னணி வீரர்களையும், தென்னகத்தின் வழிகாட்டியாக விளங்குகிற அறிஞர் அண்ணா அவர்களையும் சட்டசபைக்கு அனுப்பி வைத்து,

புளகாங்கிதத்தோடும், பெருமிதத்தோடும் வீற்றிருக்கிற இந்நேரத்தில், எதிர்காலத்தில் நாம் பெற வேண்டிய வெற்றிகள் குறித்தும், வளர வேண்டிய விதங்கள் குறித்தும், இந்தப் பாராட்டுக் கூட்டத்தில் நான் எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபட்ட காரணத்தால் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கமாக மாறி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் 15 இடங்களைத்தான் பெற்றோம்; நம்மை ஒழித்துவிட வேண்டுமென்று கூறிக் கொண்டிருந்த காங்கிரஸ் ஏறத்தாழ 150 இடங்களில் வெற்றிக் கொடி நாட்டியிருக்கிறது; என்றாலும் இரண்டிற்குமிடையே உள்ள

கிண்டல் செய்து விட்டார்

ஓட்டுகள் வித்தியாசத்தை— ஆதரித்த அல்லது வெறுத்த மக்கள் தொகையின் வேறுபாட்டையும் கூர்ந்து கவனித்தால், இந்த நாட்டில் காங்கிரசுக்கு அடுத்தபடியான வலிவும் பொலிவும் கொண்ட கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்ற மகத்தான பேருண்மை நன்கு புலப்படும்'

நாம் தேர்தலில் போட்டியிட எண்ணிய நேரத்தில், 'திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு சீட்டாவது கிடைக்குமா?' என்று ஆருடம் கணித்தவர்கள் பலப் பலர், மாற்றுக் கட்சிகளிலே! நாம் அப்போதெல்லாம் அவர்களுக்குப் பல முறை பதில் சொல்லி வந்திருக்கிறோம்; 'ஒரு சீட்டுத்தான் கிடைக்கட்டுமே! அந்தச் சீட்டும் காமராசரை கதிகலங்கச் செய்யும் துருப்புச் சீட்டாக இருக்கும்' என்று! அந்த முறையில்தான் நாம் 15 இடங்களைப் பெறும் நல்ல சூழ்நிலையை திராவிடப் பெருங்குடி மக்கள் ஏற்படுத்தினார்கள்; பலப் பல எதிர்ப்புக்கு மிடையே — சூறாவளி வேக எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு மிடையே — பண வெள்ளத்திற்கு மிடையே— படை பலத்திற்கு மிடையே— நமக்கு அபரிமிதமான வெற்றியை அளித்திருக்கிறார்கள்.

நாம் தேர்தலில் ஈடுபட்ட நேரத்தில் நம்மை ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் மட்டுமா எதிர்த்தது? கம்யூனிஸ்டுகள் கச்சை கட்டிக் கொண்டு 'காங்கிரஸ் வென்றாலும் பரவாயில்லை; திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக அமருவதற்கு மட்டும் விடக் கூடாது' என்ற காரணத்தால் பலமான எதிர்ப்பை—தாக்குதலை பத்திரிகை மூலமும், பிரச்சாரம் மூலமும், சில இடங்களில் செயல் மூலமும் செய்து காட்டினார்கள்; சோஷலிஸ்டுக் கட்சியினர் எந்தெந்த முறையில் நமக்குத் தீங்கிழைக்க முடியுமோ அந்தந்த விதங்களில் எல்லாம் நமக்குத் தொல்லை தந்தனர்; பிரஜா சோஷலிஸ்ட் கட்சியினர் எப்படியெல்லாம் நம்மோடு ஒத்துழையாமை இயக்கம் நடத்த முடியுமோ, அப்படியெல்லாம் இன்னல் அல்லல்களைத் தந்தார்கள்; தமிழரசு கழகத்தினர் இப்படியும் அப்படியும் பேசி, எப்படியும் நம்மை ஒழித்துவிட வேண்டும் என்பதற்காக மட்டுமே போராடி வந்தார்கள்; இவர்களுக்கெல்லாம் ஒருபடி உயர்வாக, நம்முடைய அரும் பெரும் தலைவர் பெரியார் ராமசாமி அவர்களும், அவரது குடிபடைகளும் நம்மை அழித்து ஒழித்துவிட வேண்டும் என்று மிக மிகத் தீவிரமாக கவனம் செலுத்தினார்கள். இவ்வளவு எதிர்ப்புகளையும் சமாளித்து— பெரியார் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே, திராவிடர் கழகம்தான் எதிர் நீச்சல் போடும் இயக்கம் என்று; அந்த நிலைமாறி, எதிர் நீச்சல் போடுகிற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்ற நிலை நாட்டிலே ஏற்பட்டது!

இன்று காங்கிரஸ் உயர்ந்திருப்பதாகத் தோன்றலாம்; குறிப்பாக அதன் இன்றைய தலைவர் காமராசரும் உயர்ந்திருப்பவராகத் தோன்றலாம்; வெற்றி போதையிலே — ஜெயமடைந்திருக்கிற நிலைமையிலே 'நாங்கள்தான் இந்த நாட்டுப் பெரிய கட்சி' என்றும் சொல்லிக் கொள்ளலாம்; 'பெரும்பாலான மக்கள் எங்களைத்தான் ஆதரித்தார்கள்' என்றும்கூறிக் கொள்ளலாம்; 'காமராசரா; அவர் அண்ணாதுரையை விட உயரமானவர்! காமராசரா; நெடுஞ்செழியனை விட மதிப்பு வாய்ந்தவர்!' என்று காமராசரேகூட எண்ணிக் கொண்டிருக்கலாம்! அவரது ஆதரவாளர்களும் கருதிக் கொண்டிருக்கலாம். ஆனால் காமராசரது அந்த உயரம் எத்தகைய உயரம் என்பதை நாமும் மறந்து விடவில்லை; நாடும் மறந்துவிட முடியாது! நாம் பொய்க்கால் குதிரை ஆட்டக்காரர்களைப் பார்த்திருப்போம். மாலை 5 மணி வரை அவனது உயரம் ஐந்து அடிதான் இருக்கும். அதற்குப் பிறகு அவன் இரவெல்லாம் ஏழடி உயரமாகத் தோன்றுவான். அவனுக்கு எப்படி வந்தது அந்த உயரம்? இரவு நேரத்தில் அவன் புரவி ஆட்டம் செய்வதற்குமுன்பாக, குதிரையைத் தன் உடலோடு கட்டிக் கொள்ளும் நேரத்திலே, இரண்டடி உயரக் கட்டைகளையும் இரு கால்களிலும் கட்டிக் கொள்வான். ஆட்டம் முடியும் வரை அவன் பார்ப்பவர்களுக்கு உயரமாகத்தான் தென்படுவான்.

அதைப்போலவேதான் காமராசர் என்ற இந்தப் புரவி நாட்டியக்காரர், தன் கால்களில் திராவிடர் கழகம் என்ற உயரமான கட்டைகளைக் கட்டிக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் உயரமாகத் தென்படுகிறார். இரவு புரவி நாட்டியம் நடைபெறுகிற வரைதான்—நாட்டிலே இருள் சூழ்ந்திருக்கிற வரைதான் — அந்த இரண்டடி உயரமும் தெரியும்! காலையிலே 'உதய சூரியன்' உதயமாகிவிட்டதும், அந்தக் கால் கட்டு அகற்றப்பட்டு விட்டதும், நிச்சயம் அவர் தனது உண்மையான, ஐந்தது உயரத்திற்கு தணிந்துதான் தீருவார் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது!

காமராசர் தற்போது மீண்டும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; மீண்டும் முதல் மந்திரியாக ஆக்கப்படுகிறார். காமராசரது இந்தத் தலைமையைக் குறித்து மற்ற எந்தப் பத்திரிகையும் மகிழ்ச்சி அடையாத அளவுக்கு, இன்றைய தினம் காங்கிரஸ்காரர்களின் ஒரே தேசிய ஏடாக இருக்கிற 'விடுதலை' மகிழ்ச்சியைக் கொட்டுகிறது! ஏதோ பெரியார்தான் இந்த நாட்டு முதல் மந்திரியாக ஆகிவிட்டாரோ என்று எண்ணக் கூடிய அளவுக்கு, திராவிடர் கழக ஏடுகளும் — தொண்டர்களும்—தலைவர் என்று சொல்

ஆத்தூர் பொதுத் தொகுதியில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் எம். பி. சுப்ரமணியம்

பதவிதேடும் காமராசர்!

கட்டைதான் 'அவர்கள்'!

லப்படுகிற சிலரும் பூரிப்படைகிருர்கள்; பெருமிதத்தால் புலம்புகிருர்கள்!

காமராசர் எத்தகைய தகுதியாலே மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர் என்பதை நாம் சொல்லாவிட்டாலும் — திராவிடர் கழகத் தோழர்கள் உணரா விட்டாலும்— அல்லது உணர்ந்துவெளியிட மறுத்தாலும் — காமராசரின் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தின்போது கடவுள் வணக்கம் பாட வந்த அம்மையார் —சௌந்தரம் ராமச்சந்திரன் என்பார் வெகு அழகாக காமராசரைக் கிண்டல் செய்வதன் மூலம் எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். பாடவந்த இடமோ காங்கிரஸ் கட்சிக் கூட்டம்; பாடுவதோ காங்கிரஸ் கட்சி எம். எல். ஏ.! என்ன பாடி

திரியாக முடிபுனைந்து திராவிடத்தை - தமிழகத்தை-திராவிடப் பெருங்குடி மக்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக—அவர்களின் நலனுக்குப் பாதகம் தரக்கூடிய வகையில்—ஆட்சிச் சக்கரத்தைக் கையிலே ஏந்தியிருக்கிருர்! உண்மையில் ஜனநாயகக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்திருப்பவர்களும், ஜனநாயக உரிமையை மதிப்பவர்களும், தேர்தல் எப்படி நடக்க வேண்டும் என்று கருதுகிருர்களோ அவர்களும், அரசியல் தெளிவு படைத்தவர்களும், அரசியல் அதிகார மூலபலமின்றி—உருட்டலும் மிரட்டலுமின்றி நடைபெற வேண்டும் என்று கருதும் உத்தமர்களும், நல்லவர்களும் நிச்சயம் உணருவார்கள், இன்றைய தினம்

சட்ட மன்றத்திற்கு அனுப்பி வைக்கிறது! அவருக்கு எதிர்க்கட்சி ஏடுகளெல்லாம் பராக்கு கூறி வரவேற்கின்றன. "வருக வருக! தலைவனே வருக! தமிழே வருக! அரசியல் விற்பன்னரே வருக! வித்தகனே—உத்தமனே வருக! வருக!" என்று வாழ்த்தி வரவேற்பு நிகழ்த்தும் அளவுக்கு நம் தலைவனை சட்டசபைக்கு அனுப்புகிருேம்; துணைக்கு நாங்கள் சிலரும் செல்லுகிருேம். நாங்கள் சட்டசபையில் அமரப்போகிற அந்தக் காட்சியை—ஏதோ தங்கள் வீட்டு மக்கள் மணவறையில் அமரப் போகிற காட்சியை —அந்த ஆனந்தத்தைத் தாயும், தந்தையும் எப்படிக் கனவு கண்டு அனுபவிப்பார்களோ, அதுபோல் தமிழகம் அனுபவிக்கிறது! மணவறை

சௌந்தரத்தம்மையார்!

இருக்க வேண்டும்? எவ்வளவோ கடவுள் வணக்கப் பாடல்கள் இருக்கின்றனவே! பிள்ளையார் வாழ்த்து இருக்கிறது—

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும்தா!"

—இதைப் பாடி இருக்கலாம்; ஆனல் பாடவில்லை! அல்லது "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்..." என்று துவங்கும் சரஸ்வதி ஸ்தோத்திரம் இருக்கிறது; பாடியிருக்கலாம்; ஆனல் அதையும் பாடவில்லை! அல்லது தேவாரத் திருப்பதிகங்களில் ஒன்றைப் பாடியிருக்கலாம்; அப்படியும் பாடவில்லை! இவை அனைத்தையும் விட்டு விட்டு—எப்படியாவது காமராசரைக் கிண்டல் செய்யத்தான் வேண்டும் என்ற எண்ணத்தால் அந்த அம்மையார், "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே!" என்று பாடினர்கள்! "படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் சந்தோஷமளிக்கும் சந்தோஷமே!" என்று பாடினர்கள்! "ஏ சட்டசபையே! சட்டசபைக் கட்சியே! சட்டசபை காங்கிரஸ் மன்றமே! நீ படித்தவருக்கும் படிக்காதவருக்கும் களிப்பைத் தருகிருய்!" என்ற பொருளில் காமராசர் கிண்டல் செய்யப்பட்டிருக்கிருர். இந்த விதமாக காமராசர் மீண்டும் முதல் மந்

அமைகின்ற ஆட்சி-காமராசர் தலைமையிலே அமைகின்ற ஆட்சி எந்த அளவிலும் இந்த நாட்டை ஆளும் சக்தி பெற்றதில்லை என்பதை!

'காமராசரது தலைமையிலே 150 பேர் இருக்கிருர்களே! நீங்கள் 15 பேர்தானே!' என்று கேலி பேசும் நமது பங்காளிகள்—நம் குடும்பத்துச் சகோதரர்கள்—"எப்படி எல்லாம் கெக்கலிப்பு கொட்டுகிருர்கள்! என்னென்ன பாராட்டுகள்! நுங்கம்பாக்கத்திலே பாராட்டாம் ஆசைத்தம்பிக்கும், கருணாநிதிக்கும்! காஞ்சியிலே—மதுரையிலே பாராட்டாம் அண்ணுதுரைக்கு! சம்பத்துக்குப் பாராட்டாம்!" என்று கிண்டலும் கேலியும் கலந்து பேசுகிருர்கள். நான் சொல்கிறேன்; அந்த 150 பேரையும் தராசின் ஒரு தட்டிலே வைத்து, மறு தட்டிலே அறிஞர் அண்ணுவை மட்டுமே வைத்தால் என்ன நடக்கும்? எந்தப் பக்கத்துத் தட்டு தாழும்? எந்தப் பக்கத்திலே நிறை அதிகம் இருக்கும்? நான் சொல்லத் தேவை இல்லை; அதை இந்த நாட்டு நீதி மன்றம்—மக்கள் மன்றம்-இந்த நாட்டுக்கு நல்லதொரு எதிர் காலத்தை நிர்ணயிக்கும் சக்தி பெற்ற வாக்காளர் பெருமக்கள் நன்கு உணர முடியும்! அத்தகைய பீடும் பெருமையும் பெற்ற — வெற்றி பெற்ற தி. மு. கழகம் இன்றைய தினம் தென்னகத்தின் வழிகாட்டியான அறிஞர் அண்ணுவை

யில் மகனும் மருமகளும் உட்காருகின்ற காட்சியைக் காணத் துடிக்கின்ற மாதா போல—பிதா போல — அண்ணனைப் போல — சொந்தக்காரர்களைப் போல—பந்தம் பாசம் உள்ளவர்களைப் போல — தமிழகம், அறிஞர் அண்ணு அவர்கள் சட்டசபையில் உட்காரப் போகும் சிங்காரத்தை— எழுப்பப் போகின்ற போர்க் குரலை — விவாதத்தை — நாட்டுக்கு நலன் பயக்கும் உரையாடல்களை அள்ளி அள்ளிச் சுவைக்க—அதன் பயனய் நாட்டுக்கு நேரப் போகும் நலனைக் காண தமிழகம் துடிதுடித்துக் கொண்டிருக்கிறது!

இந்த நிலையில் 15 பேர் நம்மவர்கள். ஆகவே 15—150 என்ற அளவை மட்டும் கவனித்து — திராவிட முன்னேற்றக் கழகம் வலுவிழந்து விட்டது என்று கணக்கிட்டு விட முடியாது. நீங்கள் கதை ஒன்று கேள்விப்பட்டிருக்கலாம். ஒருவர் தன் இரு பிள்ளைகளின் மூளை பலத்தையும் சோதிக்கக் கருதினராம். இருவரையும் அழைத்து, ஒவ்வொருவருக்கும் பத்து ரூபாய் தந்தார்; தனித் தனியாக இரு அறைகளையும் காட்டினர்; "நீங்கள் இருவரும் இந்தத் தொகையில் ஏதேனும் பொருள் வாங்கி உங்களது அறையை நிரப்ப வேண்டும்; கவனியுங்கள்—அறை நிறைய அப்பொருள் இருக்க வேண்டும்!" என்று ஆணையிட்டார்.

ஒருவன்—சிந்திக்கும் பண்பு படைத்த நல்லவன் கடைத்தெருவுக்குச் சென்ருன். விளக்கு ஒன்றை வாங்கி, எண்ணெய் ஊற்றி, திரியிட்டு, ஒளியேற்றி அறையினுள் வைத்தான். அறை முழுதும் ஒளி எழுப்பினன்: ஜோதி மழை பொழிய வைத்தான்!

மற்றவனே பகுத்தறிவு அற்ற பிள்ளை—தன் அறையில் பத்து ரூபாயுக்கும் வைக்கோல் வாங்கி அடைத்து வைத்தான்!

தந்தை வந்தார்; வந்து பார்த்தார், இரண்டாமவனது அறையை! 'அட முட்டாளே! இதற்கா நான் பணம்தந்தேன்? இவ்வளவுதான உன் புத்திசாலித்தனம்!" என்று தலையிலடித்துக் கொண்டு, முதல்வனின் அறைக்குச் சென்ருர். அங்கே அறை முழுதும் பரவி நின்ற ஒளி மழையைக் கண்டு வியந்தார்; அம்மகனின் அற்புதத் திட்டத்தை எண்ணிக் களித்தார்.

அதைப் போலத்தான் அறை முழுதும் தீபமளிக்கும் விளக்கு போல—தென்னகம் முழுதிற்கும் ஒளி தரும் திருவிளக்காகத் தோன்றுகிருர் நமது அறிஞர் அண்ணு! அப்படியானல், மறு அறையிலே அடைக்கப்பட்ட வைக்கோல் யாருக்குப் பொருந்தும்... நான் சொல்லத் தேவை இல்லை; நீங்கள் அரசியல் அறிவு படைத்தவர்கள்; புரிந்துகொள்வீர்கள்!

இந்த நிலையில் தென்னகத்து ஒளி விளக்காக — தமிழகத்து இருள் போக்க வந்த 'உதய சூரிய'னை — சட்ட மன்றம் முழுதும் ஒளி பரப்புகின்ற தீபத்தை — தமிழகத்துத் தலைவனை—தென்னகத்து வழிகாட்டியை—திராவிடப் பெருங்குடி மக்களின் தூதுவனை சட்ட மன்றத்துக்கு அனுப்புகிருேம். என்னென்றும் தொண்டு செய்தே பழக்கப்பட்ட நாங்கள் சிலரும் உடன் செல்லுகிருேம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலோடு தன் வேலை முடிந்துவிட்டதுஎன்றுகருதும் இயக்கமல்ல; "இனி ஐந்து ஆண்டுகள் கழித்துத்தானே வேலை!"

❊ தொடர்ச்சி 9-ம் பக்கம்



ஆத்தூர் தனித்தொகுதியிலிருந்து சென்னை சட்டசபை செல்லும் தோழர் இருசப்பன்.

அபிசீனிய அடிமை..

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

சிறைப் பறவை—என்னுயிற்று? சிந்தை குழம்பினுன்; சித்தம் சோர்ந்தான்!

"எங்கேடா இந்தச் சிறையிலிருந்தவள்?"—காவலாளிகளைப் பார்த்துக் கர்ஜித்தான்.

"அந்தப் பெண்ணை நேற்று இரவு ஒருத்தர் வந்து அழைச்சிகிட்டுப் போனுருங்க. அரசாங்க முத்திரையும் சாவிக்கொத்துங்கூட அவர் கையில் இருந்ததுங்க!"

"என்ன? என் பமீயை யார் அழைத்துப் போனுர்கள்? வந்த ஆள் எப்படியிருந்தான்?"

காவலாளிகள் அடையாளம் சொன்னுர்கள்.

"சயத்கான்!"— யாகூத்தின் வாய் முணுமுணுத்தது. ஆம்; அரசி ருசியா அவனை ஏமாற்றி விட்டாள்.

"இருவரும் எங்கே போனுர்கள்?"

"தெரியாதுங்க!"

"முட்டாள்," என்று அவர்களைப் பலமாகப் பிடித்துக் கீழே தள்ளினுன்.

ஆண்டுகள் பல உழைத்து, அழகான சித்திரமும் தீட்டி, அதற்குக் கண் அமைக்கும் வேலை மட்டும் பாக்கி இருக்கும் வேளையில், அந்த ஓவியத்தின் மீது வேண்டுமென்றே ஒருவன் வண்ணக் குழம்பைக் கொட்டிவிட்டால்...?

சிந்தனையைக் கலையாக்கி செயற்கரிய சிலை படைத்திருக்கும் வேளையில், பேரிடி ஒன்ருல் சிலை சிறு கற்களாக நொறுங்கி விட்டால்...?

யாகூத் செய்யும் வகையறியாமல் செயலற்று நின்றுன்!

12

ருசியா கண் விழித்த பொழுது, பல்லக்கு ஒரு மலர் வனத்தின் வழியாகச் சென்று கொண்டிருந்தது. தோட்டத்தின் நடுவே அழகான பளிங்கு மாளிகையொன்று கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. பல்லக்கு கீழே வைக்கப்பட்டது. பளிங்கு மாளிகையிலிருந்து பல பணிப்பெண்கள் வந்து அரசியை வரவேற்றனர். அரசியும் புன்முறுவலோடு, உள்ளத்தின் அச்சத்தை வெளிக்குக் காட்டாமல், அவர்களைத் தொடர்ந்து சென்றுள். மாளிகை அரசிக்குத் தேவையான அத்தனை வசதிகளோடும் அமைந்திருந்தது.

அரசி எண்ணத்தில் மூழ்கியிருந்தாள். பணிப்பெண்களின் உபச்சாரம் வேதனையாகக்கூட இருந்தது. பக்குவமாகப் பேசி அவர்களை வெளியே அனுப்பிவிட்டு, அறையில் தாளிட்டுக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினுள். அலாவுதீனின் அன்பு முகம் அடிக்கடி அவள் மனத்திரையில் தோன்றி மறைந்து கொண்டிருந்தது ...... அல்தூனியா! ஐயோ, அந்தக் கருநாகத்திடமிருந்து அவள் தப்பிக்க வேண்டுமே!

"பீகம், பீகம்!" —கதவு தடதடவென்று தட்டப்பட்டது. முகத்தை முக்காடிட்டுக் கொண்டு, பலகோடி எண்ணங்கள் மோதிக் குழப்பம் விளைவிக்கக் கதவைத் திறந்தாள்.

சயத்கான் பல்லை இளித்தபடியே நின்று கொண்டிருந்தான்!

"நீ மட்டும்தான் வந்திருக்கிருயா?"

"நான் மட்டுமா? அதோ..." என்று சயத் சுட்டிக் காட்டிய திக்கை நோக்கினுள் ருசியா.

"பீகம்!" என்று கூச்சலிட்டபடியே பமீயா அரசியைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதாள். "பீகம், நான் ஒரு குற்றமும் செய்யவில்லை; இப்பொழுதாவது என்னை மன்னிக்க மாட்டீர்களா, பீகம்?" என்று பமீயா கண்ணீர் விட்டு அழுதாள்.

"போடி பயித்தியம், யார் யாரை மன்னிப்பது," என்றுள் பீகம்.

"நான் போர்க்களத்தில் அலாவுதீன் என்ற வாலிபரைச் சந்தித்தேன். முதல் சந்திப்பிலேயே எங்கள் காதல் முகிழ்ந்துவிட்டது. அவர் அல்தூனியாவின் தளபதி. அவரை நான் பார்த்தாக வேண்டும். அவருக்கு என்னை அரசியென்று தெரியாது. ஆகவே நான் அவரைக் கண்டுபிடிக்கும் வரையில் நீ அரசியாக வேடம் புனைய வேண்டும். நான் உன் தோழியாகிவிடுவேன். என் லட்சியம் கைகூடும் வரையில் நீ இந்த ரகசியத்தை வெளியிடக்கூடாது......"

"இதுதானே பீகம்; இதோ...!"—பீகம் பணிப்பெண் ஆனுள்! பமீயா ருசியாவாக உருவெடுத்தாள். பமீயாவைப் பார்த்து திருஷ்டி முறித்துக் கொண்டாள் பீகம்!

"ஐயோ அல்லா! நீ சாட்சாத் ராணியேதான்!" என்றுள் பீகம்.

அன்று அரசி ருசியாவைச் சந்திக்க அல்தூனியா வரப் போகிருன் என்றவுடன்தான் அரசிக்கும் பமீயாவிற்கும் தாங்கள் மேற் கொண்டிருக்கும் வேலையின் நெருக்கடி புரிந்தது.

தி. மு. கழகப்
பொதுக் குழுக் கூட்டம்
14-4-57 ஞாயிறு அன்று
குளித்தலையில் நடைபெறும்.
—தலைமைக் கழகம் (தி. மு. க.)

பமீயா, அரசியை நன்றியுணர்ச்சியோடு பார்த்தாள்.

சயத்கான், போய் வரட்டுமா என்று கேட்கும் தோரணையில் அரசியைப் பார்த்தான். அரசியும் ஆமோதித்தாள்.

"பமீ, நீ நாட்டுக்காக எதையும் தியாகம் செய்யும் தியாக உணர்ச்சி படைத்தவள் என்பதை இப்பொழுதுதான் உணருகிறேன்...உன்னிடமிருந்து இப்பொழுது நான் பேருதவியொன்றை எதிர்பார்க்கிறேன் ...யாகூத்தை நான் அடியோடு மறந்து விட்டேன்; அவர் இனி உனக்கே சொந்தமானவர். உன்னை அவரிடம் சேர்ப்பது என் பொறுப்பு. ஆகவேதான் உனக்குத் தீங்கு ஏதும் ஏற்படாமல் இருக்க இங்கு அழைத்து வரச் செய்தேன்... ஆனுல், இதற்கிடையில் நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்! செய்வாயா, பமீ?" —அரசி வார்த்தைகளை அன்பிலே குழைத்தாள்.

"பீகம்; உங்களுக்குச் சிறு நன்மையாவது செய்ய முடியுமானுல். அதற்காக என் வாழ்க்கையையே அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். சொல்லுங்கள் பீகம்!"

அல்தூனியாவை எப்படிச் சந்திப்பது; அரசியாக எப்படி அவனிடம் நடிப்பது என்ற அச்சம் பமீயாவிற்கு. பமீயா வயதில் சிறியவள். வாழ்க்கையின் சிக்கல்களும் சங்கடங்களும் அவளுக்குப் புதுமையானவை. அரசியின் பராமரிப்பில் தாயின் பாசத்தையும், சகோதரியின் நேசத்தையும் பெற்று, செல்வம் சீராட்ட, செங்கோலின் பலம் அரணுக, பாடித் திரியும் பறவையாகவும், ஓடித்திரியும் புள்ளிமானுகவும் அரண்மனையில் வாழ்ந்த களங்கமற்ற உள்ளம் படைத்தவள். தொல்லையற்ற அவளுடைய வாழ்க்கைப் பாதையில் எதிர்பாராமல் எங்கிருந்தோ காதல் மலர்ந்தது. அந்த மலர் வீசிய மணத்தை அவள் அனுபவிக்கத் தலைப்படும்போதே, ஒரு பலத்த காற்று, தென்றலாக அவளை மகிழ்விக்க வேண்டியது சூருவளியாகச் சுழன்றடித்தது.

இதோ, இப்பொழுது, பெற்ற தாயினும் பெரும் பரிவோடு வளர்த்தவள்—காமத்தால் கண் மறைக்கப்பட்டு அரும்பிய தோழியின் காதலை மலர்விக்கவேண்டிய கடமையிருக்க, எல்லையற்ற தொல்லைகளுக்கு ஆளாக்கிய பின், காலங் தவறிய பின், அதிகாரம் போன பின், அவள் காதலுக்கு ஆசி வழங்குகிருள். அது மட்டுமா? இன்னல் செய்துவிட்டு, ஒரே பேருதவியும் எதிர்பார்க்கிருள்! உதவி செய்ய உள்ளம் துடிக்கிறது; ஆனுல் அதற்கேற்ற பக்குவமும் சாதுரியமும் வேண்டுமே!

பமீயா பயத்திற்கும் கடமைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தாள்!

ஆனுல் பீகமோ, அலாவுதீனைக் காண நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தாள். அல்தூனியா அழகனுயிருக்கலாம்—ஆனுல் அலாவுதீனிடம் சென்றுவிட்ட உள்ளம் எப்படியும் அல்தூனியாவிற்கு சம்மதிக்காது. ஆனுல் அவள் அல்தூனியாவின் கைதி இப்போது! எப்படி வேண்டுமானுலும் அவளை நடத்த அவனுக்கு உரிமையுண்டு. தளபதி அலாவுதீனை மட்டும் கண்டு ஒருமுறை பேசிவிட்டால்......சலீமாகவே அவள் உள்ளத்தை மட்டுமல்ல; அவரையே கொள்ளையடித்துப் போய்விடலாம். ஆனுல்...அதுவரையில் அல்தூனியா பமீயாவை அரசியென்று நம்பவேண்டுமே; பமீயும் நெருக்கடியில்லாமல் அவள் எடுத்துக்கொண்ட பாகத்தைத் திறம்படச் செய்து முடிக்க வேண்டுமே......

ருசியா காதலுக்கும் பயத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தாள்.

வெண்ணிலா தண்ணுெளி பரப்பிக் கொண்டிருந்தது. அரண்மனைத் தோட்டத்தில் அல்தூனியாவைச் சந்திக்க—அரசி ருசியாவாகச் சந்திக்க—பமீயா தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தாள்.

சயத்கான் சந்தடி செய்துவிடாமல் இருக்க, அவனுக்கு நிறைய மது கொடுத்து நீள் துயிலில் அவனை ஆழ்த்தி விட்டாள் அரசி.

பணிப்பெண்கள் வெளியில் தயாராகக் காத்திருந்தனர். உள்ளே அரசியின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள் பமீ! அரசியாக நடிக்க வேண்டிய பொறுப்பு மட்டுமல்ல அவளுக்கு; தேவையானுல், யாகூத் மட்டுமே அவளிடம் பெறுவதற்குள்ள உரிமையை ஒருவேளை அவள் அல்தூனியாவிற்கு அளிக்க வேண்டி நேரிடலாம்!......

"அழாதே பமீ! அல்லா துணை நிற்பார். நீ செய்யவிருக்கும் தியாகத்தை நான் நன்றுக அறிவேன். அதற்கு இந்த வையம் முழுவதுமே ஈடு இணையில்லை!" என்றுள் அரசி.

பமீயா புறப்பட்டாள். ஏக்கத்தோடும் பயத்தோடும் அவள் போவதை பார்த்துக் கொண்டு நின்றுள் அரசி!

(தொடரும்)

15-இடங்கள்தான் பெற்றேம்!

✱ 7-ம் பக்கத் தொடர்ச்சி

என்று வாளாவிருந்துவிடாது! தி. மு. கழகம் தேர்தலுக்கு மாத்திரம் முளைத்த கட்சியல்ல! எட்டு ஆண்டுகளுக்கு முன் நாம் தோன்றிய நேரத்தில், இப்படி வளருவோம்; வனப்போடும் வலிவோடும் நாட்டிலே நடை போடுவோம் என்று கிஞ்சிற்றும் நினைக்கவில்லை. இதே சென்னை மாநகரத்திலேதான் அறிஞர் அண்ணாவும் நாமும் மழையோடு போட்டி போட்டு, கண்ணீர் சிந்திக் கொண்டு பெரியார் ராமசாமி அவர்களிடமிருந்து பிரிந்தோம். அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே, அதுபோல துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு பிறகு இன்றைய தினம் தேர்தலில் ஈடுபட்டு, 15 இடங்களைக் கைப்பற்றியது என்றால் முதன் முதல் புன்னகை காட்டி, பொங்கிவரும் ஆர்வத்தால் நம்மை அணைத்து மகிழ வேண்டிய பெரியார், "அழிய மாட்டார்களா, இவர்கள்?" என்று அலறுகிறார் என்றால்—உள்ளபடியே தாய்மார்களின் பாஷையிலேயே சொல்லப் போனால், இது நம்முடைய போதாத காலம்தான்; துர்ப்பாக்கிய நிலைதான்!

உச்சி முகர்ந்து, "உத்தமர்களே! என்னை விட்டுச் சென்றவர்களே! ஆனாலும் உழைக்கவே பிறந்தவர்களே! நான் எந்தக் கொள்கையை நாட்டிலே சொல்லி வந்தேனோ அதை என்னைவிட அழகாகச் சொன்ன தம்பிகளே! மாணவர் பட்டாளத்தை ஈர்த்தவர்களே! மக்கள் பெருங்கடலைச் சேர்த்தவர்களே! உங்களை வாழ்த்துகிறேன்! வாழ்த்துகிறேன்!" என்று சொல்ல வேண்டிய தந்தை, "வளர விடுகிறேனா பார்! அழித்து ஒழிக்காமல் உட்காருகிறேனா பார்!" என்று சொல்லுகிறார்; சீறிப் புறப்படுகிறது அவரது பட்டாளம்! காமராசருடைய வெற்றி குறித்து காங்கிரஸ் வட்டாரம் மகிழ்வதைவிட திராவிடர் கழகத்தினர்தானே கொண்டாடிக் குதூகலிக்கிறார்கள்!

சென்ற இரண்டு ஆண்டுகளுக்கு முன் எந்தக் கொடியைக் கொளுத்த வேண்டும் என்று தீர்மானித்தார்களோ, அதே கொடியோடு இன்று திராவிடர் கழகக் கொடியும் பின்னிக் கொண்டு பறக்கிறது என்றால், இதை வேடிக்கை என்று சொல்வதா? வேதனை என்று அழைப்பதா?

திராவிடர் கழகக் கொடி நாம் கரத்திலே தூக்கிய கொடிதான்! அறிஞர் அண்ணா அவர்களும் மற்றவர்களும் பல இடங்களிலே—பட்டி தொட்டிகளிலே ஏற்றி ஏற்றி மகிழ்ந்த அந்தக் கொடி இன்றைய தினம் காங்கிரசிடம் 'சோரம்'போகும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை! அந்தக் கொடி காங்கிரஸ் கொடியோடு இணைந்து—பிணைந்து நின்று—ஏற்றி வைத்த நம்மையே பழி தீர்த்துக் கொள்ள—அழித்து விடுவதற்குப் பாடுபடுகிறது என்றால், இத்தகைய வேதனையை எந்த நாட்டுச் சரித்திரத்திலும் கண்டிருக்கவோ, கேட்டிருக்கவோ முடியாதே!

இன்னும் சொல்லப்போனால், இன்றைய திராவிடர் கழக கொடிக்கு உருவம் அமைத்துக் கொடுத்ததிலே என்னுடைய பங்கும் இல்லாமலில்லை. நான் அப்போது "குடியரசு" ஏட்டிலே துணை ஆசிரியனாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். கழகத்தின் கொடியை எப்படி அமைப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த நேரம்—அநேக மாதிரிகள் அலுவலகத்திற்குக் கிடைத்திருந்தன. நானும், அலுவலக நண்பர்கள் சிலரும், இன்று அந்த இயக்கத்திலே இருக்கும் சிலரும், கொடிக்கு என்ன அமைப்பு தரலாம் என்று யோசித்துக் கொண்டே இருந்தோம். இரவு பனிரெண்டு மணிக்கு மேலாகி விட்டது! பெரியார் மாடியிலேயே காத்துக் கொண்டிருந்தார். கடைசியில் கொடிக்கான உருவம் ஒன்றையும் முடிவு செய்து விட்டோம். கையிலே கருப்பு மை இருந்தது. அதைக் கொண்டு கருப்பு நிறத்தை வரைந்து விட்டோம்; நடுவிலே வட்டமாக சிகப்பு வைத்தாக வேண்டும். என்ன செய்வது? அலுவலக நிர்வாகியோ அறையைப் பூட்டிக்கொண்டு

ஆனால், பரவினேம் நாடெங்கும்!

கொண்டு புறப்பட்டோம்! "இந்த நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டியவர்கள் துரத்தப் படுகிறோம்! அதுவும் தந்தை வீட்டிலிருந்தே விரட்டப்படுகிறோம்! சாதாரணமாக அல்ல; நமக்குரிய பங்குத் தொகையான ஐந்து லட்ச ரூபாயை விட்டு விட்டு—அதைவிட சிறப்பு வாய்ந்த, விலை மதிப்பற்ற மாணிக்கமான தந்தை பெரியாரையே பிரிகிறோம், கொள்கைக்காக! லட்சியத்துக்காக!"—என்ற நினைவோடு இந்த நாட்டிலே நம் இதயகீதத்தை முழக்கிக் கொண்டு பிறந்தோம். பிறந்த எட்டு ஆண்டு காலத்தில்—வந்ததும் வராததுமாகத் தேர்தலில் குதித்து விடவில்லையே நாம்! எட்டு ஆண்டு காலம் ஜனநாயக ரீதியிலே இயக்கத்தின் அரசியல் வாழ்க்கையை நல்ல முறையிலே வளர்த்துக் கொண்டோம் அந்த நேரத்தில் நமக்கு அரசாங்கம் தந்த தொல்லைகள்—எதிர்க் கட்சியினர் தொடுத்த தாக்குதல்கள் எவ்வளவு என்பதை இந்த நாடு மறந்தா விட்டது? அப்பப்பா! எட்டாண்டுகள்!.. எத்தனை துன்பச் சுமைகளைத் தாங்கிக் கொண்டோம்! அந்த எட்டாண்டு காலத்திலே தான் வட சென்னை பாண்டியனைப் பலி கொடுத்தோம் — நெல்லிக்குப்பம் மஜீதை இழந்தோம்—லால்குடி நடராசனைத் துப்பாக்கிக் குண்டுகளுக்கு உணவாக்கினோம்—நம் அருமைத் தங்கம் கே. வி. கே. சாமியை இழந்து தவித்தோம்— அந்த எட்டாண்டு காலத்திலேதான் பலருடைய கரங்கள் இழக்கப்பட்டன; கண்கள் கொத்தப்பட்டன; அங்கங்கள் அறுத்தெறியப்பட்டன! இத்தகைய சித்ரவதைகளை—சிறைச்சாலைக் கொடுமைகளை—அடக்குமுறை அக்கிரமங்களை-ரத்த பலிகளை—உயிர்களை—தத்தம் செய்து வளர்ந்த கழகம்—இவ்வளவுக்

போய்விட்டார். அந்த நேரத்தில் நான் அவசரம் அவசரமாக கை விரலில் காயம் உண்டாக்கி—இரத்தம் எடுத்து—அதைக் கொடிக்கான சிகப்பு நிறமாக வைத்து — பெரியாரிடம் கொண்டு போய்க் காட்டினேன்! இதுதான் நமது கொடி என்று அறிக்கையும் விட்டார் பெரியார்! அந்தக் கொடிதான் இன்றும் திராவிடர் கழகக் கொடியாகப் பறக்கிறது!

அந்தக் கொடிதான்—கருணாநிதியின் கட்டைவிரல் இரத்தத்திலேயிருந்து சிகப்பு எடுக்கப்பட்ட அதே கொடிதான் — கருணாநிதியையே ஒழித்துவிட குளித்தலையிலே பறந்தது என்றால் உள்ளபடியே நாம் கண்ணீர் விடாமல் இருக்க முடியுமா?

என்ன பேச்சு! எவ்வளவு கேவலமான தாக்குதல்கள்! எத்தனை மோசமான கணைகள்! அவ்வளவையும் தாங்கிக் கொண்டுதான் நாம் பல இடங்களில் வெற்றி பெற்றோம். 15 இடங்கள்தான் என்றாலும், நாம் அமைத்திருக்கிற கிளைக் கழகங்கள் கொஞ்சம் நஞ்சமல்லவே! திருவல்லிக்கேணி கடற்கரையிலே நடைபெற்ற தலைமைக் கழகப் பாராட்டுக் கூட்டத்தின்போது நான் சொன்னேன், நான் குளித்தலைத் தொகுதியிலே 22 000 ஓட்டுக்களை மட்டும் பெறவில்லை; 200 கிளைக் கழகங்களையும் பெற்று வந்திருக்கிறேன்' என்று, குளித்தலையிலே நான் முதன் முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபேட்சகனாக நுழைந்தபோது ஏழே ஏழு கிளைக் கழகங்கள்தான் இருந்தன — அந்தத் தொகுதி

அங்கும்!.......

"கடவுள், சுவர்க்கம், நரகம்" என்ற கூற்றுகள் எல்லாம் வெறும் கட்டுக் கதைகள்; பொய் என்று பீக்கிங் ரேடியோ கூறுகிறது.

சீன கம்யூனிஸ்டு உள்நாட்டு சர்வீஸில், சொற்பொழிவு வானொலி நிகழ்ச்சியொன்றில், இந்தக் கூற்று இடம் பெற்றது.

"இந்த விஷயங்கள் (கடவுள், சுவர்க்கம், நரகம்) உண்மையில் ஒருக்காலும் இருக்கவில்லை. இவை எல்லாம் வெறும் புரட்டான கற்பனை, சிந்தனைகளின் விளைவுகளாகும்" என்று இந்த வானொலிப் பேச்சு கூறியது. மதத்தின் "முட்டாள்தனமான கற்பனைகளை"ப் பற்றியும் இந்த வானொலிப் பேச்சு பிரஸ்தாபித்தது.

முக்கியமாக மாணவர்களுக்காக நடத்தப்படும் "மார்க்ஸிஸம் — லெனினிஸம்" பற்றிய அநேக சொற்பொழிவுகளில் இது ஒன்றாகும்.

—யு. எஸ். ஐ. எஸ். செய்தி (9—4—57)

இங்கும்!

"எந்த வகுப்பினரின் கடவுள் மதம் அல்லது சமூக விவகாரங்களில் கம்யூனிஸ்ட் சர்க்கார் தலையிடாது" என்று நம்பூதிரிபாத் உறுதி கூறினார்.

—செய்தி (27—3—57)

இரத்தம் சிந்தி வளர்த்தோம்!

முழுதிலுமே! ஆனால் இன்றைய தினமோ — இந்தக் குறுகிய கால இடைவெளியிலே 200 கிளைக் கழகங்கள் அமைகின்ற நிலை எப்படி வந்தது? வெள்ளியணை என்ற பகுதியொன்று — தி. மு. கழகம் என்றாலே என்னவென்று புரியாத மக்கள் நிறைந்த இடம். 'அண்ணா' என்றால், அதாது படத்தைக் காட்டி—அவர் எழுதிய எழுத்துக்களை எடுத்துக் காட்டி—பேச்சைப் படித்துச் சொல்லி 'இவர்தான் அண்ணா!" என்று கூறுகிற நிலைமை இருந்த இடத்தில், இன்றைய தினம் தி. மு. க. வின் கிளை திறக்கப்படுகிறது என்றால்; சாதாரணமாக அல்ல; மூன்றே நாட்களில் ஒரு சிறு கட்டிடம் அமைத்து

பித்தம் தலைக்கேறிப் பிதற்றுகிறார்கள்!

முடித்து — அந்தச் சொந்தக் கட்டிடத்திலேயே திறப்பு விழாவும் நடைபெறுகிறது என்றால்; இந்தத் தேர்தலில் தி. மு. கழகம் பரவாத இடமெல்லாம் பரவி விட்டது என்பதை யார்தான் மறுக்க முடியும்? வெற்றிபெற்ற பகுதி —தோல்வி கண்ட பகுதி எங்குமே இத்தகைய வளர்ச்சி தோன்றி விட்டது! இதுதான் இந்தத் தேர்தல் பிரவேசத்தினால் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்த பெரிய லாபம்! இது சாதாரணமாகப் பெறக்கூடிய லாபமல்ல; எட்டாண்டுகாலம் தி. மு. கழகம் நடத்தியசேவை—போராட்டம் — மக்களிடம் கொண்டிருந்த தொடர்பு — இவைகளின் விளைவு!

தேர்தல் முடிவுகளை வைத்துக்கொண்டு, நாம் அபரிமிதமான வாக்குகள் பெற்றும், சிற்சில இடங்களில் தோற்றுவிட்டதை விரிவாக்கி—நம்மைத் தாக்குகிறார்கள் நாம் வெற்றி பெற இயலாதுபோன இடங்களில் காங்கிரஸ்பெற்ற வெற்றி எத்தகையது என்பதை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டுகிறேன். சென்னையிலே டி. டி. கிருஷ்ணமாச்சாரி வென்றார் என்றால் எப்படி வென்றார்? தோழர் பி. பாலசுப்ரமணியம் அவர்கள் 10,000 ஓட்டுகள் அதிகமாக இருக்கிறார் என்ற செய்தி ஒன்றரை நாள் காட்டுத் தீபோல் நாடெங்கும் பரவி இருந்தது. சென்னை மாநகரமே திரண்டு வாக்குகளை எண்ணுகிற இடத்திலே கூடியிருந்தது. ஏறத்தாழ இரண்டு நாட்கள் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் —இந்தியத் துணைக் கண்டத்தின் நிதி மந்திரி—புனுகுப் பூனையைப் போல, தன் வீட்டுத் தாழ்வாரத்திலே சுற்றிச் சுற்றி —தேடாத தெய்வங்களை எல்லாம் தேடி — செய்யாத 'பிரார்த்தனை' எல்லாம் செய்து —நிலை தடுமாறி—தத்தளித்து— நிற்க முடியாமல் — அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருந்தார் என்றால், அப்படி அவரை உலவ வைத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உண்டு என்பதை யார் மறுக்க முடியும்?

அதே நிலைமையில்தான் ராமசாமி படையாச்சியாரும் வென்றிருக்கிறார். அவர் மந்திரி—ரத கஜ துரக பதாதிகள் உண்டு; எதிர்த்து நின்ற தோழர் கிருஷ்ணமூர்த்தி மாணவர் — ஓட்டை உடைசல் பித்தளையைச் சேர்ந்தவர்! அங்கே பண பலம் உண்டு; இங்கே குண நலம் மாத்திரமே உண்டு! அங்கே படை வரிசை ஏராளம்; இங்கே தடை மிக அதிகம்! இந்த நிலைமையிலும் மயிரிழையிலே தான் தப்பியிருக்கிறார் ராமசாமி படையாச்சியார்! இதற்கு என்ன பொருள்? ஒரு மந்திரியை ஒருநாள் இரவு முழுவதும் கூண்டுப் புலியைப் போல உலவவிட்ட பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்துக்கே உண்டு என்பதை யார்தான் மறுக்க இயலும்?

இந்த அளவில் பொதுத் தேர்தலில் நாம் பெற்றிருக்கிற வெற்றி—அடைந்திருக்கிற அனுபவம் — செய்ய இருக்கிற தொண்டு— இவை அடுத்த தேர்தலில் நமக்கு எப்படிப் பயன்படப் போகிறது என்பதை சற்று உருவகப்படுத்திப் பாருங்கள் : இன்று கேரளம் நாளை தமிழகம்! .... காங்கிரசில்லாத மந்திரி சபை! ஏன் அமைய முடியாது? அதற்கான சூழ்நிலைதான் இன்று நாட்டிலே அரும்பியிருக்கிறது. நாம் நம் கோரிக்கைகளை மக்கள் மன்றத்திலே வைத்து—பணிகளை விளக்கி — கொள்கைகளை எடுத்துச் சொல்லி — தொண்டுகளை விவரித்து ஓட்டுகள் பெற்றோம். அப்படி வாக்குகள் பெறுவதற்கு தந்த வாக்குகளைக் காற்றிலே பறக்க விட்டு விடமாட்டோம். பதவியே பெரிதென்று இருந்துவிட மாட்டோம்! பெரியார் சொல்லுவது போல 150 ரூபாய் பணத்துக்காக அல்லவே நாம் சட்டமன்றம் செல்வது!

ஆசைத்தம்பி உங்கள் பிரதிநிதியாக சட்டசபைக்கு செல்ல விரும்பியது எதற்காக? அவர் இந்தத் தொகுதியில் சுற்றிய இரண்டு மாத காலத்தில்— இரண்டு வாரங்கள் மட்டுமே உட்கார்ந்து இரண்டு கதைகள் எழுதியிருந்தால் ஆயிரக் கணக்கிலே சம்பாதித்திருக்க முடியும்! அதைப் போலத்தான் அறிஞர் அண்ணா அவர்களும், நானும், மற்ற தோழர்களும் நினைத்தால் நாட்டுப் பணியை மறந்து நிறைய சம்பாதித்திருக்கலாம். 'பர்மிட்டுகள்' 'லைசன்சுகள்' வழங்கி அல்ல; மூளையை உருக்கி — சிந்தனைகளைத் தேக்கி! கடற்கரையிலே — கனி குலுங்கும் சோலையிலே — எங்களது வீடுகளிலே அல்ல; இயற்கையின் தாழ்வாரத்திலே அமர்ந்து. பட்டி தொட்டிகளிலே உள்ள தோட்டங்களிலே அமர்ந்து — இயற்கை வழங்குகின்ற வனப்புகளை கவிதைகளாக — கதைகளாகத் தீட்டினோமானால் — இந்த 150 அல்ல, நிறைய பொருள் சேர்க்க முடியும், 'விடுதலை'யின் கணக்குப்படி—பெரியாரின் கணக்குப்படி! இன்னும் சிலர், இருதயத்தை எங்கேயோ எடுத்து வைத்து விட்டுச் சொல்லுகிறார்கள், அறிஞர் அண்ணாவும், ஆசைத் தம்பியும், நானும் வெற்றி பெற்றது சினிமாவினால்தான் என்று — சினிமாவால் பெற்ற செல்வாக்கினால்தான் என்று! நான் அவர்களுக்கு அறைகூவல் விட்டுச் சொல்கிறேன். நாங்கள் பெற்ற வெற்றி சினிமாவால் அல்ல; ஏனெனில் நாங்கள் கலையுலகத்திலிருந்து அரசியலுக்குத் தாவியவர்கள் அல்ல! அரசியல் உலகிலே அடி உதைகள்பட்டு— கல்லடியும் சொல்லடியும் பெற்று—பல ஆண்டு காலம் கட்சிக்காகத் தொண்டாற்றி— மக்களுக்கிடையே கொள்கைகளை எடுத்துச் சொல்லி— பெரிய பெரிய கலவரங்களிலே உயிரைத் திரணமாக மதித்துக் குதித்து—போராட்டங்களிலே நேரடியாகக் கலந்து — அதன் காரணமாக அண்ணாவுக்கும் எனக்கும் சிறைத் தண்டனையும் — ஆசைத் தம்பிக்கு தலை ரோமத்தையே சர்க்கார் எடுத்துக் கொள்ளுகிற நிலைமைகள் எல்லாம் ஏற்பட—'புதுச்சேரி சம்பவங்கள் குறுக்கிட — அரசியல் துறையிலிருந்தும், சமுதாயத்துறையிலிருந்தும் எடுத்துச் சொல்லுகிற கருத்துகளைக் கலைத்துறை மூலமாகவும் எடுத்துச் சொல்லலாம்; அதற்கு அங்கிருந்து கைலாகு கொடுக்கிறார்கள்; அதுவும் நாங்களாகச் சொல்லவில்லை; 'வருக, வருக' என்று இரு கைகூப்பி வரவேற்கிறார்கள் என்ற நிலை ஏற்பட்ட பிறகுதான் கலைத் துறையிலே அடியெடுத்து வைத்தோம். சென்றோம், சென்ற இடத்திலும் எங்கள் கருத்துக்களைச் சொல்லத் தவறவில்லை. அதற்காகப் போராடினோம். நிபந்தனைகள் போட்டோம் நாங்கள் எழுதிக் கொடுப்பதைத் தான் படமாக எடுக்க வேண்டுமென்று! அங்கே கொள்கையை விலை கூறவில்லை.

நாங்கள் அரசியல் என்ற பாலைவனத்திலே நடக்கின்ற நேரத்திலே —இடையிலே ஏதோ நீரூற்றுகள் போலக்கூட இல்லை; கொஞ்சம் இளைப்பாற அங்கே நிற்கும் ஒட்டகத்தின் நிழலிலே உட்காருவதைப் போலத்தான் கலையுலகத்தைக் கருதுகிறோமே தவிர அங்கேயே ஐக்கியமாகிவிடவில்லை! அங்கிருந்து சிலரை இழுத்துக் கொண்டு தான் வந்திருக்கிறோம்.

என் கலையுலகப் பயணத்தின் காரணமாக நமது புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் இயக்கத்துக்குக் கிடைத்தார்; அறிஞர் அண்ணாவினால் நடிப்பிசைப் புலவர் ராமசாமி கிடைத்தார்!

இப்படி இயக்கத்தை அணு அணுவாக வளர்த்து வந்த நமக்கு, இப்போது நம்முடைய பாதை தெளிவாகி விட்டது! விடி வெள்ளியும் உதயமாகி விட்டது. அந்தப் பாதையிலே நடந்து, நமது இலட்சிய முகட்டை அடைய உங்களை எல்லாம் அழைத்து என் நன்றியுரையை இத்துடன் முடிக்கின்றேன், வணக்கம்.

-: விற்பனையாகிறது :-

வெள்ளி வீதி

10—4—57 இதழ்

வண்ண முகப்புடன்!
புதிய வனப்புடன்!

விலை 14 காசு

கருணாநிதி நிகழ்ச்சிகள்

ஏப்ரல் 14 குளித்தலை
,, 15 திருச்சி
,, 16 குளித்தலை — உயர் நிலைப்பள்ளி இலக்கிய விழா

மானத்தோடு வாழ்வோம்!

"பணம் வாங்கிக் கொண்டு ஓட்டுப் போட்டிருக்கிறார்களே. என்ன அக்கிரமம் சார், இது?"

—ஏதேனும் ஒரு கேள்வியையோ, அல்லது சிக்கலான பிரச்சினையையோ அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் என்னிடம் பேச வருவார் எனது நண்பர்! அப்போதுதான் பேச்சு சூடேறும்; வாதம் வளரும்; நேரம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடும்; பொழுதும் நல்ல முறையில் கழியும் என்பது அவரது எண்ணம்! பேச்சுக்குச் சளைக்காதவன் நான்: வந்தவரை விடுவேனா? "என்ன சண்முகம்! இது ஒன்றும் ஆச்சரியமான செய்தியல்லவே! எங்கும்தான் பணம் விளையாடியிருக்கிறது......பணம் மட்டுமா? பயமுறுத்தல்..."

"அதிருக்கட்டும்! நினைத்தால் நெஞ்சு துடிக்கிறதே! பணத்தை வாங்குகிறார்களே; அப்போது தங்கள் மானத்தை விற்றுவிடுகிறோம் என்பதை ஏன் மறந்துவிடுகிறார்கள்?...இது ஒரு பிழைப்பா?"

—நண்பர் விடுபவராக இல்லை!

"என்ன செய்வது? வறுமை! பிழைப்புக்கு வழியில்லை என்றால் இப்படி வரும் வாய்ப்பை யார்தான் நழுவ விடுவார்கள்?"

"என்ன பேச்சு இது...வரட்டு வாதம்! இதைப் படித்துப் பாருங்கள்: புரியும் மானத்தின் மகத்தான தன்மை!...நேற்றைய சிறுவனுக்கு இருக்கும் மான உணர்ச்சி கூடவா பதினெட்டு வயதுக்கும் மேலான வாக்காளர்களுக்கு இல்லாமல் போய் விட்டது!..."

ஏதோ கடிதம் ஒன்றை எடுத்துக் கீழே எறிந்து விட்டு என் முகத்தைப் பார்த்தார் நண்பர். அவர் அப்படிப் பார்த்தால் கோபம் கொண்டிருக்கிறார் என்று பொருள்!

நான் அந்தக் கடிதத்தை எடுக்கப் போனேன். அவர் அனுமதிக்கவில்லை; தானே எடுத்துக் கொண்டார். "சிறுவன்......நேற்றைய பையன்...அப்பா அம்மா இல்லாதவன்......அனாதை ... அவனுக்கு இருக்கும் மானம் மரியாதை...யாருக்கு வரும்?...நினைத்தால் என்னவோ செய்கிறதே! மிருகங்களுக்கு மத்தியிலே அந்த மென்மை இருதயம் கொண்டவன் எப்படித்தான் பிறந்தானோ..."

கடிதத்தையும் கொடுக்காமல், மர்மமாகப் பேசிக் கொண்டே போன நண்பர் என் ஆவலை வெகுவாக சோதித்துக் கொண்டிருந்தார். 'வளவள' என்று நிறுத்தாமல் பேசிக் கொண்டே போகும் தனி சக்தி பெற்ற அவரை 'போர்' உலக ஏகச் சக்கரவர்த்தி—என்று கிண்டல் செய்திருக்கிறோம் நாங்கள். ஆனால் இப்போது அவரது பேச்சு ஒரே மர்மமாக-அரண்மனை ரகசியம்போல இருந்தது. என்னால் பொறுக்க முடியவில்லை. "விபரமாகத்தான் சொல்லுங்களேன்!" என்றேன்.

"குழந்தைகளை இந்த நாட்டுச் செல்வங்கள் என்கிறார்களே. அதை நம்புகிறீர்களா நீங்கள்? அதோ பாருங்கள் 'காலண்ட'ரை—கொழு கொழு வென்று அழகாகக் குழந்தையின் படத்தைப் போட்டிருக்கிறார்கள். படத்தைக் காட்டி மயக்கி, கம்பெனிக்கு விளம்பரத்தைச் சேர்க்கிறார்கள். ஆனால் இப்படித்தான் இருக்கிறதா, இந்த நாட்டுக் குழந்தைகள்?"

கேள்வி ஒன்றைக் கேட்டுவிட்டு, பதிலையும் அவரே சொல்லும் பாணியில் தொடர்ந்தார்:

"வேந்தனை உங்களுக்குத் தெரியுமா? எந்த நாட்டு வேந்தன் என்று கேட்டுவிடாதீர்கள். அவன் வீடே இல்லாதவன். அவன் எனக்கு அறிமுகமானதே ஒரு விசித்திரமான சம்பவம்...

"அன்று 'சைனா பசா'ரில் நடந்து கொண்டிருந்தேன். 'சார், பார்க்கர் வேணுமா சார்? விலை எட்டணாதான்! கடையிலே கிடைக்காத பேனா! வேணுமா சார்?' என்ற குரல் என் பின்னால் எழும்பியது. பள்ளி ஆசிரியனாயிற்றே, ஒன்றுக்கு இரண்டாக பேனாக்கள் இருந்தால் தான் என்ன; வாங்கித்தான் வைப்போமே—என்று திரும்பினேன். 'எங்கே, எங்கே' என்று காத்துக் கொண்டிருந்தானோ என்னவோ, அந்த நடைபாதைக் கடை முதலாளி என் முகத்தைப் பார்த்ததும் 'வாங்க சார், வாங்க சார்!' என்று அன்பொழுக வரவேற்றான். அவன் கையிலும் எதிரேயிருந்த பெட்டியிலும் பல வண்ணப் பேனாக்கள் இருந்தன. சிரித்த முகத்தோடு தேனொழுகப் பேசிக் கொண்டே அந்த எட்டணா பேனாவின் 'மகாத்மிய'த்தை வர்ணித்துக் கொண்டே போனான் அவன். 'சரியப்பா! ஒரு பேனா கொடு—அதுவும் உனக்காக; உன் பேச்சுக்காக!' என்றேன். அவன் ஒரு பேனாவைக் கொடுத்துவிட்டு 'எட்டணா கொடுங்கள் சார்!' என்றான்.

"நான் என் பையிலிருந்த 'மணி பர்சை' எடுத்து விரித்தேன். ஆசையோடு சேர்த்து வைத்திருந்த 'நயா பைசா'க்களை எண்ண ஆரம்பித்தேன்.

"சார், சார்! சீக்கிரம் கொடுங்கள்! அதோ வந்துட்டான் சார்!" என்று அலறினான் அந்தச் சிறுவன்-வேந்தன்! நான் ஏதும் புரியாமல் விழித்தேன். 'சீக்கிரம் சார்; சீக்கிரம் சார்!' என்று அலறினான் மறுபடியும்! கையிலே தடியைச் சுழற்றிக் கொண்டு போலீஸ்காரர்கள் இருவர் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். நடுத்தெருக் கடைகள் அத்தனையும் கண நேரத்தில் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. ஏதோ பயங்கரப் பிரளயம் நிகழப் போவதற்கான அறிகுறிபோல் தோன்றியது அங்கிருந்த நிலைமை! நான் அவசரமாக 'நயா பைசா'க்களை எண்ணினேன். ஆனால், அதற்குள் அந்தச் சிறுவன் ஓடியே போய்விட்டான். எனக்கு என்னவோ போல் இருந்தது. என் கையிலிருந்த பேனாவை - இனாமாகக் கிடைத்த அந்தப் பேனாவை ஒருமுறை பார்த்துக் கொண்டேன். அவனைத் தேடினேன்; கிடைக்கவில்லை; 'மாய'மாய் மறைந்தே போய்விட்டான். நான் அப்போது காத்திருக்க முடியாத நிலை; மீண்டும் அவனை சந்திக்கும் போது சில்லரையைத் தந்து விடலாம் என்று எண்ணிப் புறப்பட்டேன்!

"என் எண்ணம்தான் அப்படியே தவிர, அதற்குப் பிறகு நான் வேந்தனைச் சந்திக்கவே இல்லை. சைனா பசாருக்குச் சென்ற போதெல்லாம் அவன் கிடைக்கவே இல்லை! அவனுக்குச் சேர வேண்டிய அந்த 'எட்டணா' என்னிடம் இருப்பது என்னை என்னவோ செய்தது!

"கடைசியில் நான் அவனை சந்திக்கத்தான் செய்தேன். ஒரு நாள் 'மரினா' கடற்கரையில் ஒரு தனி இடத்தில் உட்கார்ந்து கொண்டு, வரப்போகும் பள்ளித் தேர்வுக்காக என்னென்ன கேள்விகளைத் தயார் செய்யலாம் என்ற சிந்தனையில் மூழ்கிக் கிடந்தேன். "வேர்க்கடலை, பட்டாணி!" என்று கூவிக் கொண்டே என்னைத் தேடி வந்தான் ஒரு தம்பி. அவன் முகத்தை நோக்கினேன்: அவன் வேந்தன்தான்!

"எனக்கு நிம்மதி வந்தது. எட்டணாவை எடுத்து அவனிடம் தந்தேன். அவன் வாங்க மறுத்துவிட்டான். காரணம் கேட்டேன். அவன் பேனாக்கடை முதலாளியிடம் உண்மையை எடுத்துச் சொல்லி, அவரிடம் மன்னிப்பு பெற்று விட்டானாம். அந்தத் தொழிலை அவன் இப்போது விட்டு விட்ட காரணத்தால், அந்த எட்டணாவை என்ன செய்வது? இப்படிக் கேட்டான் அவன். எனக்கு வியப்பாக இருந்தது. 'இருந்தால் என்ன; நீ எடுத்துக் கொள்ளேன்!' என்றேன் நான். 'எனக்கெதற்கு சார் இனாம்? அது கேட்காது கிடைக்கும் பிச்சைதானே! உழைத்துப் பிழைக்கணும் சார்; உழைத்துப் பிழைக்கணும்!' என்றான் அவன். அந்தச் சிறுவனின் களங்கமறியா உள்ளத்தில் பசுமரத்து ஆணி போல பதிந்துவிட்டிருக்கும் நேர்மையை எண்ணி வியந்தேன் நான். 'ஏனப்பா நீ பேனா வியாபாரத்தை விட்டுவிட்டாய்?' என்று கேட்டேன்.

"அதை எவன் சார் செய்வான்? போலீசுக்கு பயந்து பயந்து—சட்டத்திற்கு மாறாக சம்பாதிக்கும் ஒவ்வொரு காசும் விஷமல்லவா, சார்? மானத்தை இழந்து பிழைப்பானேன்? ஆறு குளம் கூடவா நம்மை வேண்டாம் என்று விரட்டிவிடும்?"

—உலக அனுபவத்தில் ஊறி எழுந்த மேதைகள் நிலையில் நின்று பேசினான் அவன். என்ன துணிச்சலான பேச்சு—எதற்கும் அஞ்சாதவனாக இருக்கிறானே என வியந்தேன் நான். 'இந்த வியாபாரம் எப்படி?' என்றேன். 'ஏதோ ஒரு நாளைக்கு இரண்டணா, மூன்றணா கிடைக்கிறது. கால் வயிற்றுக்கு எனக்கு கண்டிப்பாகப் போதும் அது!' என்றான் அவன்.

"நான் திகைத்துப் போய் விட்டேன். 'இவ்வளவு தானா?' என்றேன். 'எவ்வளவாக இருந்தால் என்ன? அவ்வளவும் மானத்தோடு கிடைத்தது சார்! ... பேசாமல் 'அம்மா பசிக்குதே; அம்மா பசிக்குதே!' என்று நாலு வாசற்படியில் நின்று பாடினால் போதுமே; இந்தத் தனிக்கட்டை உண்மையிலேயே 'வேந்தனா'கவே வாழலாம். இருந்தாலும் மானத்தை இழக்க நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன் சார்! பட்டினியால் வாடினாலும், என் பாதையிலிருந்து நகரவும் மாட்டேன்..."

"அவன் என் பதிலுக்குக்கூடக் காத்திராமல் எழுந்து போய்க் கொண்டிருந்தான். வீடு திரும்பும் வரை அவனது 'கணீர், கணீர்' என்ற அந்தக் குரல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

"மறுபடியும் நான் அவனை சந்தித்தபோது, நான் சற்றும் எதிர்பாராத வண்ணம் மிக மிகப் பரிதாபகரமான தோற்றத்தில் இருந்தான். 'என்ன தம்பி? உடலுக்கு என்ன?' என்றேன். 'உடலுக்கு ஒன்றுமில்லை; குடலுக்குத்தான் உணவில்லையேன்னு ஒரே கவலை; கலக்கம்!' என்றான் அவன்.

"கடலை வியாபாரம் என்ன ஆயிற்று?—என்றேன். 'அதை ஏன் கேக்கிறீங்க சார்! ஒரு நாள் பீச்சிலே ஒரு ஆளை சந்தித்தேன். 'நல்ல பையனா யிருக்கியே; என்னோடே வாயேன்; நல்ல வியாபாரத்திலே பழக்கி விடுகிறேன்'னாரு. சரிதான்னு புறப்பட்டேன். ஆனால் அப்புறம்தான் புரிந்தது அவர் என்னைப்பாழுங் கிணற்றிலே தள்ள இருந்தது. என்ன மானம்கெட்ட செயல் சார்! போலீஸ் துணையோடு அவர் கள்ளச் சாராயம் விற்கிறார். எடுபிடியாளாக என்னைப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தார். நான் 'தூ' என்று உதறிவிட்டு வந்துவிட்டேன். ஆனால் கடலைக் காரரும் நான் இரண்டு நாட்கள் வரவில்லை என்பதால் வேண்டாம் என்று சொல்லிவிட்டார். என்ன செய்வது? வேறு வழி தேடி அலைந்து கொண்டிருக்கிறேன்' என்றான்.

"அவனது மெலிந்த உடலையும், குழி விழுந்த கண்களையும், அப்போதும் குறையாத முகத்தில் படர்ந்திருந்த தைரியம் கலந்த

✱ 12-ம் பக்கம் பார்க்க

கடைசிப் பக்கம்

எழுத்தாணி

கே. அருணகிரி; வேதாரணியம்.

(?) வாழ்வீர் வரவேற்பு என்றால் என்ன?

குடும்ப அகராதிப்படி பள்ளி அறையிலும், குருசாமியின் அகராதிப்படி நடுத்தெருவிலும் நடைபெறுகிற ஒரு நிகழ்ச்சி! விளக்கம் தேவையானால் 10-4-57 விடுதலையின் 'மணி' வாசகத்தைப் படித்துப் பார்க்கவும்!

பி. அமிர்தலிங்கம்; குடந்தை.

(?) கக்கனுக்கு அமைச்சர் பதவி கிடைப்பது எதைக் காட்டுகிறது?

காமராசருக்கு அடங்கி ஒடுங்கி நடந்தால் 'பிரமோஷன்' கிடைக்கும் என்பதைக் காட்டுகிறது!

காசிராஜன்; பூந்தமல்லி.

(?) ஏழைகளை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும் என்று ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் கூறுவதேன்?

தங்களால் முடியாது என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். அவ்வளவுதான்!

கமலத் தியாகராசன்; கரூர்.

(?) தென்னாட்டில் அரசியல் 'ஸ்டண்ட்' தெரிந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

ஒரே ஒருவர்தான் இருக்கிறார்! அவருக்கு இணை இந்த அகில உலகத்திலும் இல்லை.

(?) ராமசாமி படையாச்சி யாருக்கு ஏன் மந்திரி பதவி கிடைக்கவில்லை?

சென்ற தேர்தலுக்குப் பின் கோழியைக் கொன்றார் இந்தத் தேர்தலுக்குப் பின் அவரே கொல்லப்பட்டுவிட்டார். அவ்வளவுதான்!

து. சிவசுப்ரமணியன்; கோவை.

(?) பணம் கொடுத்து ஓட்டு வாங்கியதைப்போல் கேரளத்திலும் காங்கிரஸ் ஓட்டுக் கொள்முதல் செய்திருந்தால்?

அப்போதும் வெற்றிபெற முடியாது! ஏனெனில் படித்தவர்கள் தொகை அங்கு அதிகமாயிற்றே!

ஏழுமலை; திருவொற்றியூர்.

(?) திராவிடர் கழகம் தேர்தலுக்கு நிற்காமலிருப்பதால் என்ன லாபம்?

அவர்கள் தேர்தலுக்கு நிற்காமல் இருப்பதால்தான் லாபம்!

வி பாலசுப்ரமணியன். ஜெயங்கொண்டசோழபுரம்.

(ர) அடுத்த தேர்தலில் வெற்றி பெற்று தி. மு. க. மந்திரி சபை அமைத்தால்...?

உஸ்... நீங்களே படுத்தாதீர்; தந்தைக்கு இரத்தக் கொதிப்பு வந்துவிடும்!

(?) மதம்; பணம் — இவற்றின் தாய் எது?

மோட்சத்தின் ஆசை நாயகிதான் மதத்தின் தாய்; மோட்சத்தின் ஆசை நாயகி பணத்தின் தாய்!

குளித்தலையில்

வெற்றிவிழா-வரவேற்புப் பொதுக் கூட்டம்

★

14-4-57 நடைபெறுகிற தி. மு. க.

பொதுக் குழுவை யொட்டி

மாலை **6** மணிக்கு, கடம்பர்துறை அழகிரி சதுக்கத்தில்

பொதுமக்கள் சார்பில்

வெற்றி பெற்ற எம். எல். ஏ., எம். பி.—க்களுக்கு நடைபெறும் வரவேற்பு விழாவில்

தோழர் மு. கருணாநிதி

தலைமையில்

அறிஞர் அண்ணா

நாவலர் நெடுஞ்செழியன்

மற்றும் கழக முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள்.

—வெற்றிவிழா வரவேற்புக் குழுவினர், குளித்தலை.

விற்பனையாகிறது!

கற்கண்டு நிகர்

முத்தாரம்

'மருதாணி'-

ஆசிரியர் மு. க. தீட்டியிருக்கும் கவிதை நடைச் சிறுகதை-முத்தமிழ்த் தேனருவி!

'கலைத் தமிழ்ச் செல்வம்'

-'இராவண காவியம்' இயற்றிய புலவர் குழந்தை தீட்டிய ஆராய்ச்சிக் கட்டுரை!

ரெபக்கா-

பதின்மூன்று முறை அச்சு வாகனம் ஏறி அழகிய பெருங் கதை சுவை குறையாமல் சுருக்கப் பட்டிருக்கிறது!

—மற்றும் தெள்ளு தமிழ்க் கவிதைகள்; நெஞ்சை யள்ளும் பிறமொழி நாட்டுக் கதைகளின் உணர்ச்சி குன்றாத மொழிபெயர்ப்புகள்; அனைத்தும் கொண்ட கருத்துக் கருவூலம்!

விலை 8 அணா

பிறைவானம்....

✻ *11-ம் பக்கத் தொடர்ச்சி*

வசிகரத்தையும் பார்க்கப் பார்க்க எனக்கு வேதனையும் சிரிப்பும் மாறி மாறித் தோன்றியது. 'தம்பி, நான் ஒரு வழி சொல்கிறேன்—கேட்கிறாயா?' என்றேன். 'பிச்சை எடுப்பதற்கும் மானமிழந்து வாழ்வதற்கும் தவிர வேறு எந்த வழி சொன்னாலும் நான் கேட்கத் தயார்' என்றான்.

''என் நண்பர் ஒருவரிடம் சொல்லி உனக்கு ஏதேனும் நாணயமான வேலை வாங்கித் தருகிறேன். ஆனால் அவர் வெளியூர் சென்றிருக்கிறார். இன்னும் பத்து தினங்களில் வந்து விடுவார். ஆகவே இந்தா, என் முகவரி— பத்து நாட்கள் கழித்து என்னை வந்து பார்!'' என்று சொல்லி, என் விட்டு முகவரியை அவனிடம் கொடுத்து விட்டு நகர்ந்தேன்.

''அன்றுதான் நான் அவனைக் கடைசியாகப் பார்த்தது...''

''ஏன்? அவன் இறந்து விட்டானா?...'' என்று படபடப்போடு கேட்டு விட்டேன் நான். அந்தச் சிறுவனின் சோக—ஆனால் வீரக் கதையைக் கேட்டு வந்த ஆவலில் அதுவரை இடைமறிக்காதிருந்த நான், என்னையும் மீறி இப்படிக் கேட்டுவிட்டேன்.

''சாகவில்லை நண்பரே, சாகவில்லை! ஆனால் அவன் என்னவோ எழுதுகிறான், வேந்தன் செத்து விட்டதாக!...'' என்றார் நண்பர் சண்முகம்.

''இதென்ன புதிர்?......புரியவில்லையே!...''—என்றேன் நான்.

''புதிரல்ல; இதைப் படியுங்கள்; புரியும்!'' என்றார் நண்பர். அந்த மர்மக் கடிதம் என் முன்னால் விழுந்தது.

''அன்புள்ள ஐயா,

உங்கள் வேந்தன் விம்மி விம்மி அழுது கொண்டே இதை எழுதுகிறான். 'மானம்; மானம்' என்றே கனவிலும் முழங்கிய அந்தப் பேதைச் சிறுவன், மனிதாபிமானம் மறந்த உலகத்தின் கொடிய கரங்களால் நெறித்துக் கொல்லப்பட்டுவிட்டான்! ஆமாம்; நீங்கள் சந்தித்த வேந்தன் இறந்தே போய்விட்டான். மானம் மறந்த மரக்கட்டை — சன வழியிலே உடல் வளர்க்கும் வேந்தன் இதை எழுதுகிறேன். ஐயா, நான் என்ன தவறு செய்தேன்? பிச்சை எடுக்க வெட்கப்பட்டு—ஆனால் பாழும் பசியால் உந்தப் பட்டு—ஆற்று வெள்ளத்தை நாடி ஓடியது ஒரு பெரும் தவறா? அதற்கு ஒரு வழக்கா? ஐயோ, தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தேன் என்று என்னைப் பிடித்து உண்மையிலேயே கொன்று விட்டார்களே. ஐயா! நான் இப்போது சிறைக் கைதி! நான் நேரம் தவறாது சாப்பிடுகிறேன்; உறங்குகிறேன்; ஆனால், நான் 'மானத்தோடு வாழ்வேன்!' என்று மமதையோடு சொன்னேனே — அது மண்ணாயிற்று! ஐயா, என் நிலை கண்டு இரங்கி—என் துணிவு கண்டு வியந்த இந்த உலகத்தில் ஒரே மனிதர் நீங்கள்தான்! ஆகவேதான் உங்களுக்கு மட்டும் இதை எழுதுகிறேன். நான் தோற்றுவிட்டேன்; என்னை மறந்து விடுங்கள்!

—வேந்தன்'

படித்து முடித்ததும் தலை தூக்கினேன். நண்பர் சண்முகம் வேதனை தாங்காது எழுந்து போய் விட்டதை உணர்ந்தேன்.

—சொர்ணம்

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு